Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.


| மலர் கஉ | பிரமாதி ஆண்டு ஆனித் திங்கள் 1939ஆம் ஜூன்மீ | இதழ் சு |
|---|---|---|


## சிறு புத்தியால் வாழ்க்கை கருதாதே

[G. கலியாணம், B. A., D. Econ.]

இச்சொற்றொடர் பெரிய மடம் திருப்புகழான “கலகவிழி மாமகளிர்...” என்னும் தொடக்கத்துப் பாட்டில் காணப்படுகிறது. இது “தினைத்தனையுள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே” என்னும் திருவாசகத்துத் திருக்கோத்தும்பிப் பாசுரத்தையும், “கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்து” என்னும் அகவல் சொற்றொடரையும் நினைவூட்டுகிறது.

நம் வாழ்க்கையை உயர்வுபடுத்தக் கூடும் என்பதை மேல்நாட்டுக் கவிஞர் லாங்பெலோ (Longfellow) என்பவர் “Lives of great men all remind us that we can make our lives sublime” என்று கூறியிருப்பதால்

அறிகிறோம். அப்படி நாம் வாழ்ந்து உய்வதற்கு முதற் கருவியாக உள்ளது கல்வி. கல்வி நம் இயற்கை அறிவை விசாலமாக்கி, புத்தியைத் தெளிவிப்பதால் அடையும் பலனை நாம் நன்குணர்ந்தால் சிறுவாழ்க்கை வாழக்கருதமாட்டோம். சிறுபுத்தி அல்லது துர்ப்புத்தி நமக்குக் கேடுதரும் என்பதை நாம் நன்குணர வேண்டும். அப்போது நாம் தூயராய் அடியவர் என்பதற்கு அருகராவோம். கற்றிடும் அடியவர் புத்தியில் கணபதி திருக்கோயில் கொள்வார் என்பதை அருணகிரியாரே "கைத்தல நிறைகனி" என்னும் பாட்டில் விளக்கியுள்ளார். ஐம்புலன்களாகிய முரட்டுக் குதிரைகளை அடக்கச் சுய புத்தியாகிய பாகன் தேர்ந்திருக்கவேண்டும். எந்த விஷயத்தில் உண்மைச் சுகம் உண்டு, எந்தச் சுகம் போலிச்சுகம் என்னும் அறிவு வந்தால்தான் உயர்ந்த வாழ்வு வாழலாம். பட்டினத்தார் "காதென்றும் மூக்கென்றும் கண்ணென்றும் காட்டியென் கண்ணெதிரே, மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட தூது" என்றும், அதுசுகம் தரும் என நாடுவது துர்ப்புத்தி என்றும் நமக்குப் போதிக்கிறார். அருணகிரியார்,

"கலகவிழி மாமகளிர் கைக்குளே யாய்ப்பொய்
களவு மதனூல் பல படித்தவா வேட்கை
கனதனமு மார்புமுறல்"

சிறுபுத்தியென்று நமக்குப் புத்தி புகட்டுகிறார். இப்படிச் சிற்றின்பச் சிறுமையை விளக்கி அறிவுச் சுடர் கொளுத்தும் திருப்புகழ்ப் பாட்டுகள் பல உள. "(மகளிர்) கலவியில் நலம் அற்பசுகம் ஆகிலும் மா அனுபவம் இது சற்றும் விடவோ இயலாது இயலாதே" என்று "உமையெனும் மயில் பெற்ற மயில் வாகனனே" என்னும் முதல் உடைய பாட்டில் வருந்துகிறார். அப்படி மனம் வருந்தி இறைவன் அருள்பெற்று

அதன் வழியாய்த்தான் சிற்றின்பக் கடலைக் கடக்க முடியும் என்று உணர்ந்து "ஐங்கரனை ஒத்தமனம்" என்ற தொடக்கத்தபாட்டில்,

"மங்கையர் சுகத்தை வெகு இங்கிதம் என்றுற்ற மனம்
உன்றனை நினைத்தமைய அருள்வாயே"

என்று வேண்டுகிறார். கருவேள் ஆகிய மன்மதன் ஆட்டத்தை ஒழித்து உய்வதற்குச் செவ்வேள் ஆகிய குமரன் அருள் அவசியம். அப்படி அவன் அருள் பெறும் வழி அவனை இடைவிடாது நினைத்து அதனால் அமைதி நிலைபெறுதல் நலம் என்று மேற்கூறிய பாட்டால் அறிகிறோம். அந்த அமைதி நிலைபெற்றால் "மோக ஆசை முறியிட்ட பெட்டி" ஆகிய இத்தேகம் உள்ள அளவும் இறைவன் நமக்குத் தோன்றாத் துணையாய் நின்று பாதுகாப்பன். "தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே" என்னும் அப்பர் திருவாக்கு கவனிக்கத்தக்கது.

மதனாகிய கஜேந்திரன் சிற்றின்ப மடுவில் இறங்கித் துய்க்கும் போது ஆசையாகிய முதலையால் அல்லற்பட்டு ஆற்றியும் பயன்பெறாது இறுதியில் ஆதிமூலமே என்று இறைவன் அருளைநாடி உய்ந்தான் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே நாமும் இறைவன் திருவருளை இடைவிடாது நாடிப் பிரபஞ்சம் என்னும் சேற்றிலிருந்து மீண்டு உய்வோமாக.

# திருவாரூரர்

[P. தியாகராஜன், B.A., L.T.]

## XVI

## சுந்தரரும் இயற்கை விரிப்பும்

### (அ) ஆறு-ii மற்றைய ஆறுகள்

**வணக்கம்**

*வேதமுதற் கலைகளெலாம் விரைந்து விரைந்தனந்தமுறை*
*யோதவவைக் கணுத்துணையு முணர்வரிதா மெம்பெருமான்*
*பாதமலர் நினதுதிருப் பணிமுடிமேற் படப்புரிந்த*
*மாதவம்யா துரைத்தருளாய் வன்றொண்டப் பெருந்தகையே.*

—வடலூரார்

(1) பெண்ணையாறு :—திருவாரூரருடைய திருவாயால் முதன் முதல் பாடப்பட்ட ஆறு, தென் பெண்ணையாகும். அது சுந்தரர் முதலில் அருள் பெற்ற 'அருட்டுறை' இருக்கும் திருவெண்ணெய் நல்லூர் வழியாக ஓடுகிறது. முதலாவது பதிகத்தில் பெண்ணையை ஒன்றிரண்டு சொற்களால் பேசுகிறார். "வேயார்" "மின்னார்" "செடியார்" 'தாதார்" 'மண்ணார்' 'தேனார்' பெண்ணை என்று அதன் உரம் பெற்ற மண் வளமுற்ற கரையில் மூங்கிலும் மற்றச்செடிகளும், மின்னல் நிறமும் தாதும் தேனும் நிறைந்த பூங்கொடிகளும் அமர்ந்து விளங்கின என்கிறார். ஒரு பாடலில் 'காரூர்புனல் எய்திக்கரைக் கல்லித்திரைக்கையால் பாரூர், புகழ் எய்தித் திகழ் பன்மா மணியுந்திச் சீரூர் பெண்ணை' என்று கரிய நிறமுடைய நீரில் பலவித பெரிய மணிகளைத் திரையாகிய கைகளால் ஏற்றிக்கொண்டு வருகிறதையும் அது மிகப்புகழ் படைத்ததென்பதையும் எடுத்துச் சொல்லுகிறார்.

அவ்வாற்றினை, திருத்துறையூர் வழியாகச் செல்லுகையில் மிகவும் சிறப்பாகப் பின் வருமாறு விரித்துக் கூறுகின்றார்.(13) "மலையாரரு வித்திரள் மாமணியுந்திக் குலையாரக் கொணர்ந் தெற்றியோர் பெண்ணை" "வடபால் கலையாரல் குற் கன்னிமா ராடுந் துறையூர்" "மத்தம் மதயானையின் வெண்மருப்புந்தி முத்தங்கொணர்ந் தெற்றியோர் பெண்ணை" "கந்தம் கமழ்காரகில் சந்தனம் உந்தி, செந்தண்புனல் வந்திழி பெண்ணை வடபால் கரும்பார் மொழி கன்னிய ராடுந் துறையூர்" "அரும்பார்ந்தன மல்லிகை சண்பகம் சாடிச், சுரும்பாரக்கொணர்ந் தெற்றியோர் பெண்ணை" "பாடார்ந்தன மாவும் பலாக்களும் சாடி, மொட்டாரக் கொணர்ந்தெற்றியோர் பெண்ணை" "மாதார் மயிற்பீலியும் வெண்ணுரை யுந்தித், தாதாரக் கொணர்ந்தெற்றியோர் பெண்ணை" "கொய்யா மலர்க்கோங்கொடு வேங்கையும் சாடிச், செய்யாரக் கொணர்ந் தெற்றியோர் பெண்ணை" "விண்ணோர்ந்தன மேகங்கள் நின்று பொழிய மண்ணாரக் கொணர்ந் தெற்றியோர் பெண்ணை" என்னும் தொடர்கள் நீர்ப்போக்கின் விசையையும் அந்நீரில் அடித்துக் கொண்டு வரும் பலவகைப்பட்ட பொருள்களையும் குறிக்கின்றன. இந்த ஆறு மைசூர் மேட்டு நிலத்தில் (சுவலில்) தோன்றிக் கர்நாடகவெளியில் ஓடுகிறது. மலைநாட்டில் விளையும் பொருள்களாகிய அகில், சந்தனம், மயிற்பீலி, வெண்மருப்பு, மா, பலா, கோங்கு, வேங்கைமரம் முதலியவைகளை நீரில் கொண்டு வருகிறது. கோங்கம் பூ, வேங்கைப்பூ, மயிற்பீலி முதலிய சிறுபொருள்கள் தற்செயலாய் ஆற்றில் விழுந்து மிதந்து கொண்டு வரக்கூடும். அகில், சந்தனம், மா, பலா, வேங்கை மரம் முதலிய பயன்படு மரங்கள் ஆற்று ஓரங்களில் வளர்ந்திருந்தால் வெள்ளம் பெருகியபோது அவைகளை வேர் பறித்து வீழ்த்தி நீரில் அடித்துக் கொண்டு வருவதுண்டு. ஆரூரர்

இவ்வாற்றைப் பாடினபோது வெள்ள நாள் என்று சொல்ல முடியாது. ஆனால் வணிகத்தின் பொருட்டு மரங்களை வெட்டி ஆற்றில்விட்டு வேண்டிய விடத்தில் கரையேற்றிக் கொள்வது ஓர் எளிய முறை. இது பல நாடுகளில் நடைபெறுகிறது. அதே போல சுந்தரர் நாளில் மரங்களைத் துண்டுகளாக்கிப் பெண்ணையாற்றில் விடுத்தனர் போலும்.

(2) கெடிலம் :—திருவதிகை என்னும் திருவூர் அருகே செல்கிறது. அதனை நம்பிகள் 'எறிகெடிலம்' என்று அடை கொடுத்துப் பேசுகிறார். அதன் நீரோட்டம் மிகுந்த விசையுடையது போலும். 28-ம் பதிகத்தில் "இரும்புனல் வந்தெறிகெடிலம்" "ஏந்துநீர் எறிகெடிலம்" என்றும் "கூந்தல் தாழ்புனல் மங்கை குயிலன்ன மொழியாள் சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக் குலாவி, வாய்ந்த நீர்வரவுந்தி மராமரங்கள் வணங்கி மறிகடலை யிடங்கொள்வான் மலையாரம் வாரி ஏந்து நீர் எறி கெடிலம்" என்றும் மராமரங்களை இழுத்துக் கொண்டும் மலையாரங்களை ஏந்திக்கொண்டும் கடலை அடையும் கருத்தோடு எறிந்து செல்வதைப் பாடினார்.

(3) பாலாறு :—இதனை வடதிருமுல்லைவாயிற் பதிகத்தில் (69) குறிக்கிறார். 5-வது திருப்பாட்டில் "சந்தன வேருங் காரகிற் குறடுந் தண்மயிற் பீலியுங் கரியின் தந்தமுந் தரளக் குவைகளும் பவளக் கொடிகளும் சுமந்து கொண்டுந்தி வந்திழிபாலி வடகரை முல்லைவாயிலாய்" என்றார். பாலாறு முல்லைவாயில் அருகே இப்பொழுது ஓடுவதாகத் தெரியவில்லை. இது திருவேற்காட்டில் ஓடும் பாலாற்றின் பிரிவாயிருக்கலாம். இவ் யாறு ஆரூரர் நாளில் காவிரி போன்று நீரோட்ட முடைத்தாயிருந்தது போலும். அதனால் தான் சந்தனவேர், அகிற்கட்டை, மயிற்பீலி, யானைக் கொம்பு, முத்துக்கள், பவளக்கொடிகள் அதன் வெள்ளத்தில் வந்தன.

பவளக்கொடிகள் கடலில் உண்டாவதாகச்சொல்லப்படுகிறது. எப்படி அது இங்கு ஆற்றில் வந்தது என்பது வியப்பைத் தருகிறது. ஒரு வேளை மக்கள் வேண்டுதலின் பேரில் பவளக் கொடிகளை ஆற்றில் விடுவது பண்டை வழக்கமோ அன்றிப் பவளக்கொடிகள் மலைப்புறங்களிலும் காடுகளிலும் வளர்வதுண்டோ ? இஃது ஆராயக் கிடக்கின்றது. இவ்விதமாக உயிராறுக இருந்த பாலி சேக்கிழார் பெருமான் நாளில் வறண்டு காணப்பட்டது. அதனுல் தான் அவர் பாலியின் நீர் ஊட்டத்தை ஒரு தாயின் பாலிலைக்கு ஒப்பிட்டார்.

(4) முத்தாறு :—திருமுதுகுன்றத்தை வலம் வருவது போல ஓடுகிறது. 43-ம் பதிகத்தில் ஓர் அடியில் அதனை "எத்திசையுந் திரையேற மோதிக்கரை கண்மேல் முத்தி முத்தாறு வலஞ்செயும்" என்றார். மூழ்கினருக்கு வீடளிக்கும் முத்தாறு ஆதலால் 'முத்தி முத்தாறு' என்று இரண்டு தடவை இப்பதிகத்தில் எடுத்துச் சொன்ஞர்; அதன் பெருக்கத்தைப் புகழ்ந்து பேசினர்.

(5) நிவா :—இந்த ஆறு தில்லை வெளியில் ஓடுவதால் மிகச் சிறந்து விளங்கினது. பலரும் இதனைப்பாடியுள்ளார். திருநெல்வாயில் அரத்துறை என்னும் சிவனதூர் வழியாக ஓடுமிடத்தில் அது தன் நீர்ப் பெருக்கத்தில் பல பொருள்களை விசையாக அடித்துக்கொண்டு வருவதைப் பின்வருமாறு அழகாகப் பாடுகின்றார் : "கல்வாயகிலுங் கதிர் மாமணியும் கலந்துந்தி வரும் நிவவு; "கறிமாமிளகும் மிகுவன் மரமும் மிகவுந்தி வருந்நிவவு", "கோங்கலர் வேங்கையலர் மிகவுந்தி வருந்நிவவு", "ஏலம் இலவங்கம் எழிற் கனகம் மிகவுந்தி வருந் நிவவு", "உலவு முகிலிற்றலை கற்பொழிய வயர்வேயொடிழி நிவவு" என விரித்துரைத்தார். இதிலும் மிளகு இலவங்கம், ஏலம், அகில், மணி, கனகம், வேய்முதலிய தண்

ணீரில் வருவதாகக் கூறுகின்றார். மிளகு ஏலம் இலவங்கம் முன்னாளில் ஆர்க்காட்டு வெளியிலும் விளைந்தன போலும்.

(6) கொள்ளிடம் :—தமிழ் நாட்டில் ஓடும் ஆறுகளில் இதுவே மிக அகன்றது. காளுட்டு முள்ளூரில் அமர்ந்த பெருமானைப்பாடுகையில் இதனை நன்கு புகழ்ந்து பேசுகிறார். இது மிகுந்த ஆழம் உடையது; முதலைகளும் உள. இருந்தாலும் மகளிர்கள் துணிந்து இதில் மூழ்கித் தம்முடைகள் நீரால் அலைத்து இழுக்கப்படவும், தலைமயிர் அவிழ்ந்து நீரில் அலசவும், நெற்றியில் அணிந்த குங்குமம் கலந்து நீரில் அடித்துக் கொண்டு போகவும் விளையாடுவதை "உடை விழக் குழலவிழக்கோதை குடைந்தாடக் குங்குமங்கள் உந்தி வருங்கொள்ளிடம்" என்றும், "குருமணிகள் கொழித்திழிந்து சுழிந்திழியுந் திரைவாய்க் கோல்வளையார் குடைந்தாடுங் கொள்ளிடம்" என்றும் அழகான சொற்கிழி வரைந்திட்டார். இந்த வாற்றிலும் மணிகள் வருகின்றன என்றனர்.

(7) மண்ணியாறு :—இது காவிரியின் சிறிய கிளைகளில் ஒன்று. இதனைத் திருவாழ்கொளிபுத்தூர் (57) பதிகில் "கந்தின் மிகக்கரியின் மருப்போடு காரகிற் கவரிம்மயிர் மண்ணி, வந்துவந்து இழிவாழ்கொளிபுத்தூர்" எனச் சிறப்பித்துப் பாடினார்.

(8) அரிசிலாறு :—இதன் பெயர் இப்பொழுது அரசலாறு என வழங்குகிறது. சோழ நாட்டில் ஓடுகின்ற காவிரியின் பெருங்கிளைகளில் மிகச் சிறந்தது. இதனுடைய நீரைத் தான் புகழ்த்துணை நாயனார் திருப்புத்தூர் அழகருக்குக் கொண்டுவந்து ஆட்டினார் என்பதை (9)ல் "அகத்தடிமை செய்யுமந்தணன்றான் அரிசிற் புனல்கொண்டு வந்தாட்டுகின்றான்" என்று குறிக்கின்றார்.

இவ்வூரின் வழியாக வருமிடத்தில் இது பலமலைப் பொருள்களைக் கொண்டு வருவதாகப் பாடுகிறார்; "கலைக் கொம்புங்கரி மருப்பு மிடறிக் கலவம் மயிற்பீலியுங்காரகிலும் அலைக்குப் புனல்சேர் அரிசில்;" "முரிக்குந்தளிர் சந்தனத் தொடு வேயுமுழுங்குந் திரைக்கைகளால் வாரிமோதி அரிக்கும் புனல் சேர் அரிசில்" "விழிக்குந்தழைப் பீலியோடேல முந்தி விளங்குமணி முத்தொடு பொன் வாரி, அழிக்கும் புனல் சேர் அரிசில்" "கழைக்கொள் கரும்புங் கதலிக்கனியுங் கமுகின் பழுக்காயும் கவர்ந்து கொண்டிட் டழைக்கும் புனல் சேரரிசில்" "இடிக்கு மழை வீழ்த்திழுத்திட் டருவியிரு பாலு மோதியிரைக் குந்திரைக்கை, அடிக்கும் புனல் சேரரிசில்" "காரூர் மழை பெய்து பொழியருவிக் கழையோட கிலுந்திட் டிரு கரையும் போரூர் புனல்சேர் அரிசில்" என மான்கொம்பு, யானை மருப்பு, மயிற்பீலி, காரகில், சந்தனம், வேய், ஏலம், மணி, முத்து, பொன், கரும்பு, கதலிக்கனி, பாக்குப்பழம் முதலிய விலைபெற்ற பொருள்கள் இந்த ஆறு கொண்டு வந்து மக்களுக்கு உதவினது. விழிக்குந் தழைப்பீலி, கழைக்கொள் கரும்பு, கமுகின் பழுக்காய் என்ற தொடர்களில் வரும் அழகிய அடைமொழிகளை உற்று நோக்கவும்.

(9) சிற்றாறு:—இது கொங்கு நாட்டிலுள்ள திருவெஞ்சமாக் கூடல் வழியாக ஓடுகின்றது. மலை நாட்டில் பெரியாறு என்று பண்டை நூல்களில் பேசப்படும் ஆற்றை நோக்க இது சிற்றாறு எனப்பட்டது போலும். இதன் நீர்ப்பெருக்கில் பல்வகை மலைநாட்டுப் பொருள்கள் வந்ததாகக் குறிக்கின்றார். பளபளவென்று ஒளிக்கும் மூங்கில், முத்து, ஏலம், இலவங்கம், தக்கோலம், இஞ்சி, சந்தனம், அகில், சாமரை முதலியன வெள்ளத்தில் கொண்டுவரப்பட்டன. இச்செய்தியை 42-ம் பதிகத்தில் "எறிக்குங் கதிர்வேயுதிர் முத்தமோ

டேல மிலவங்கந் தக்கோலமிஞ்சி, செறிக்கும் புனலுட் பெய்துகொண்டு மண்டித் திளைத்தெற்று சிற்றாறு'' "குளங்கள் பலவும் குழியும் நிறையக் குடமாமணி சந்தனமு மகிலுந் துளங்கும் புனலுட் பெய்து கொண்டு மண்டித் திளைத்தெற்றும் சிற்றாறு'' "தண்ணாரகிலுந் நலசாமரையும் அலைத்தெற்று சிற்றாறு'' "காடும் மலையும் நாடுமிடறிக் கதிர் மாமணி சந்தனமுமகிலும் சேடனுறையுமிடந்தான் விரும்பித் திளைத்தெற்று சிற்றாறு'' என்னும் தொடர்களிலிருந்து தெரியலாம். இவ்வாற்றைச் சேடன் உறையும் இடம் விரும்பிச் செல்கிறதென்கிறார். சேடன் உறையும் இடம் கடல் போலும்.

(10) பாலாவி:—இலங்கைத் தீவைச் சேர்ந்த மாதோட்டத்தில் உள்ள கேதீச்சுரம் இந்த ஆற்றின் கரையில் இருந்தது. அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானை 80-ம் பதிகத்தில் பாடுங்கால் "பாவம் வினையறுப்பார் பயில் பாலாவி'' என்று இதன் கரையில் பெரியவர்கள் தீவினைகளைப் போக்க, வீட்டு நெறிக்குரிய முறையில் பயிற்சி செய்துகொண்டிருப்பதை எடுத்துச் சொன்னார்.

# பொறையுடைமை

[ஜி. சுந்தரமையர்]

தில்லைவாழ் அந்தணர் புராணத்தில் நாம் காணும் முக்கியமான குறிப்பு யாதெனின் "உலகெலாம் புகழ்ந்து போற்றும், மானமும் பொறையும் தாங்கி மனையறம் புரிந்து வாழ்வார்'' என்பதே. இல்லறத்தானுக்குப் பொறையுடைமை அவசியம் என்று ஏற்படுகிறது.

இவ்வதிகாரத்தை மணக்குடவர் நடுவுநிலைமைக்குப் பின் வைத்திருக்கிறார். பருதியாரும் இம்முறையைத்தான் தழுவியிருக்கிறார். ஆனால் பரிமேலழகர் பிறனில் விழையாமை என்னும் அதிகாரத்திற்குப் பின் வைத்திருக்கிறார். உரையாசிரியர்கள் குறள் அதிகாரங்களை ஏதோ காரணங்களைக்காட்டித் தங்கள் தங்கள் கருத்திற்கிசைந்தபடி அதிகார வரிசைக்கிரமங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அது போலவே ஒவ்வோர் அதிகாரத்திலும் குறள்கள் வரிசைகளும் மாறுபடுகின்றன. எந்தவிதமாய் வள்ளுவனார் அமைத்திருப்பார் என்பது படிப்பவர் நோக்கத்தைப் பொருத்ததாயிருக்கிறது. இதுதான் சரியான வரிசையென்று சாதிப்பது முடியாதெனத் தோற்றுகிறது. பருதியாரும் பரிமேலழகரும் இவ்வதிகாரத்துக் குறள்களை ஒரே வரிசையில் வைத்திருக்கிறார்கள். மணக்குடவர் வேறு ஒழுங்கைக்கொண்டிருக்கிறார்.

“நெறியினீங்கிய செய்தாரையும் பொறுக்க வேண்டுமென்றற்கு, இது பிறனில் விழையாமையின் பின் வைக்கப்பட்டது” என்று பரிமேலழகர் காரணம் காட்டுகிறார். நல்லொழுக்கத்தினின்றும் நீங்கிப் பிறன் மனையாளை விரும்புதல் முதலிய காரியங்களைச் செய்தவர்களையும் பொறுத்தல் தகைமை என்று ஆகிறது. இது ஒப்புக்கொள்ளத்தக்கதா என்று சற்று ஆராய்வதோடு இந்நீதி உலகத்திற்குப்போதிக்கக்கூடியதா என்றும் கவனித்தல் வேண்டும். குறள்களிலேயே பொறையுடைமைக்கு ஓரெல்லை விதித்திருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது. நல்ல குணங்களுக்கும் வரம்பின்மை என்னும் குற்றம் சாருதல் தகைமைத்தோ?

இது விஷயத்தில் வள்ளுவனார் வரலாற்றில் ஒரு பழங்கதை சொல்வதுண்டு. கடைத்தெருவில் தினமும் அவர் சிரமத்தோடு நெய்த துணியை விற்கும் வழக்கமுண்டாம்.

ஒரு நாள் ஒரு சிறுவன் அத்துணியின் விலையைக் கேட்டு அத்துணியைப் பாதியாய்க்கிழித்து விலை கேட்டானென்றும் அப்பாதியை மறுபடியும் பாதியாய்க் கிழித்து விலை கேட்டானென்றும், சிறுவன் கிருதைக் கவனியாமல் இக்கேள்விகளுக்கெல்லாம் மிகவும் பொறுமையாய்ப் பதில்கள் சொன்னரென்றும், மறுநாள் அதே பையன் அவர் வீட்டிற் புகுந்து அவர் மனைவியை அவமதித்துச் சண்டைக் கிழுத்தான் என்றும், இதைக் கண்டு பொறுதவராய் வள்ளுவனார் அப்பையனைப் பிடித்து இறுக்கிக் கட்டினார் என்றும், அத்தருணத்தில் அந்தப் பையன் "அகழ்வாரைத் தாங்கு நிலம்போல்" என்ற குறள் உலக உபதேசத்திற்கு மாத்திரம் தானோ, தாங்கள் ஒழுகுவதற் கல்லவோ என்று முறையிட, அதற்கு வள்ளுவனார் "செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க, செய்யாமை யானுங் கெடும்" என்ற குறளைக் காட்டி அச்சிறுவனை நல்வழியில் திருப்பினார் என்றும், சிறுவனும் நற்போதமடைந்து தன் பிழையைப்பொறுக்க வேண்டினான் என்பதுமே கதை.

கதையை மெய்யெனக் கொள்வாருமுண்டு; பொய்யென ஒதுக்குவாருமுண்டு. உலக நீதியை விளக்க ஒரு புத்திமான் நிகழாத வரலாற்றை நுழைத்துவிட்டான் என்றும் வைத்துக் கொள்ளலாம். கதையிலிருந்து அறிய வேண்டியதென்ன? குறளுக்குப் பொருள் சொல்லும் போதும் நிச்சயிக்கும்போதும் மற்றக் குறள்களும் ஞாபகத்தி லிருக்க வேண்டும். பொருள் நிச்சயிக்க வேண்டிய குறளையும் ஊன்றிப்பார்க்கவேண்டும். "தம்மை யிகழ்வார்" என்பது தானே குறள். ஏழாவது குறளில் காணும் "அறனல்ல தற்பிறர் செய்யினும்" என்பதைப் பிறர் தற்செய்யினும், என்று அன்வயம் செய்தால் தம்மை யிகழ்ந்ததைத் தான் பொறுக்க வேண்டுமென்பதை வற்புறுத்துகிறது. ஒரு

வன் நமது வீட்டிற்குள் புகுந்து நம் மனைவியைப் பெண்டுக் கிழுத்தால் பொறுத்துக்கொண்டிருக்கவா இவ்வதிகாரம் வகுக்கப்பட்டதாக வைத்துக்கொள்ளுகிறது ! பரிமேலழகர் விருத்தியுரை பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று உபதேசிப்பதாகத் தோற்றுகிறது. ஒருவன் நமது மகனைக் காரணம்பற்றிக் கொல்ல எத்தனிக்கிறான். பார்த்துக்கொண்டு சும்மா யிருப்பதா? மனைவியின் கற்பைக் காக்கவேண்டாமா? மகனின் உயிரைக் காப்பாற்றவேண்டாமா ? இகழ்தலாவது மிகை (தீங்கு) செய்தலும் கொல்லுதலுமாகும். இவ்வாம் பிலாப் பொறுமை வாய்ந்தவனை உலகம் மடையன், முட்டாள் என்று நிந்திக்குமேயொழிய பொறுமையை வியந்து கூறவே கூறாது.

"பொறுத்தார் பூமியாள்வார்" என்கிற பழமொழியை யாவரும் அறிவார்கள். உடனே எத்தீங்குகளையும் எவ்வித மான ஒழுங்கிலாக் குற்றங்களையும் சகித்துக்கொள்ளவேண் டும் என்று பொருள் அமைத்தல் தவறாகும். நடுவுநிலைமை வாய்ந்தவன் தனக்கு ஏற்படும் தீங்குகளைப் பொறுத்தலே தகைமையாகும் என்பதுதான் கருத்து.

பருதியார் கொண்ட கருத்து யாவரும் கவனிக்கத் தக்கதே. அதாவது அறியாமையினால் காரணமின்றி ஒரு வன் தமக்குத் துன்பம் செய்துழி தானும் அதனைத் திருப்பி அவனுக்குச் செய்யாது அவனைக் குறித்து மனத்தின்கண் எழும் வெகுளியைத் தோன்ற விடாது அடக்கல், நடுவு நிலைமை வகித்தற்குப் பொறையுடைமை இன்றியமையாதாத லின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

தகுதியான் வென்றுவிடல் என்று எட்டாவது குற ளிருப்பதால் நடுவு நிலைமைக்குப் பின் வைப்பது தான் தகுதியெனத் தோன்றுகிறது. இது குறளில் கிடைக்கும் உட்சான்றெனை நான் நினைக்கிறேன்.

"அகழ்வாரைத் தாங்கு நிலம் போல்" என்ற உவமைக்குப் பருதியைத்தவிர மற்ற உரையாசிரியர்கள் சரியான பொருள் கண்டார்கள் என்று சொல்வதற்கில்லை.

பூமி யாவற்றையும் தாங்குகிறது. யாவற்றையும் புரப்பதும் பூமியே. பயன் கருதி குளம் வெட்டுவோரையும், நந்தவனம் முதலிய நற்பணி செய்வோரையும் பூமி கல்லுவோர் என்று கொள்வதற்கில்லை.

பயனில் காரியம் செய்பவரே நிலத்துக்குப் பொறை (பாரம்)யாவார். அவர்களையும் நிலம் தாங்கி உணவுப்பொருள் தந்து காப்பாற்றுகிறது. வீணாய்த் தன் பூமியைத் தோண்டினவனும் உணவு அளிக்கும் பான்மையினால் பூமியைப் பயன்விளைவு செய்யக் கருதுகிறான். ஆகவே அவனை நல்வழியில் திருப்புகிறது என்று வைத்துக் கொள்ளலாம்.

ஆகவே அறியாமையால் காரண மின்றி மிகை செய்தாரையும் கொல்லுவோரையும் பொறுத்தல் தகுதியாகும். வேணுமென்று தீங்கிழைப் பவர்களையும், தன்னையல்லாது மற்றவருக்குச் செய்யும் தீங்கினையும் பொறுத்தல் தகைமை யென்று கொள்வதற்கில்லை. மடவார் பொறை என்று முடியும் மூன்றுவது குறளைக் கவனிக்க.

## பருதியார் பாடம்

(1) அகழ் வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

(2) பொறுத்த லிறப்பினை நன்றே அதனை
மறுத்தல் அதனினு நன்று.

**பரிமேலழகர்**—இறப்பினை யென்றும்.

**தாமத்தர்**—பொறுக்க இறப்பினை என்றும்.

(3) இன்மையு ளின்மை விருந்தொருவல் வன்மையுள்
வன்மை மடவார் பொறை.

பரிமேலழகரும், மணக்குடியாரும், விருந்தோரால்.

(4) நிறையுடைமை நீங்காமை வேண்டில் பொறையுடைமை
போற்றி யொழுகப்படும்.

மணக்குடியார்—வேண்டின்.

(5) ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து

(6) ஒருத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

(7) அறனல்ல தற்பிறர் செய்யினும் நொந்து
திறனல்ல செய்யாமை நன்று.

மணக்குடியார், வி ஓ ஸி :—ஒரு நாளே இன்பம்.

பரிமேலழகர், மணக்குடியார் தருமர் :— திறனல்ல...நோ நொந்து அறனல்ல.

தாமத்தர் :—திறனல்ல......நோய்நொந்து அறனல்ல.

(8) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

(9) துறந்தாரிற் றூய்மையுடைய ரிறந்தார்வாய்
இன்னாச்சொ னோக்கிற்பவர்.

(10) உண்ணாது நோற்பார் பெரியோர் பிறர் சொல்லும்
இன்னாச்சொ னோற்பாரிற் பின்.

தாமத்தார் :—இன்னாது நோற்பாரின் பின்.

குறிப்பு :—முதல் இரண்டு குறள்களுக்கும் மத்தியில் "தகவோய்" என்ற சொல்லை வைத்தால் ஒரு பூர்த்தியான ஒரு நல்ல வெண்பாவாகிறதைக் கவனிக்க. குறள் மணிகளைப் பொறுக்கித் தனிச்சொல்லை அமைத்துப் பூரண

வெண்பாக்கள் கல்விமான்கள் செய்ய எத்தனிக்கலாம். ஒருவிஷயம் நேயர்களுக்குத் தெரிவிக்கலாம் என்று தோன்றுகிறது. சென்னையிலுள்ள ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் பத்திரிகை யொன்று மாதந்தோறும் வெளிவருகிறது. அப்பத்திரிகையில் தமிழ்ப் பிரிவும் உளது. அதில் அந்த ஸ்கூல் ஆசிரியர் திருவாளர் ச. கந்தசாமி முதலியார் அவர்கள் வினாக்கள் கிளப்பி விடையளிப்பது போல் தனித்தனியாகக் குறள்களைப் பொறுக்கிப் பத்துப்பத்தாய் அமைத்து வினாக் கிளப்பி விடையளிப்பதுபோல் பள்ளி மாணாக்கர்களுக்கும் தெளிவுண்டாக்குவதற்காக ஒரு நூல் தொகுத்து வருகிறார். “ மணிக்குறள் - ஐந்தாம் பத்து ” என்னும் கட்டுரையைப் படித்தேன். கற்றறிந்தவர்களும் அதைப்படிக்கலாம். குறள் சொற்களையும் குறள் சொற்றொடர்களையும் குறள் கருத்துகளையும் ஆங்காங்கே கையாண்டும் அமைத்தும் ஒரு நூலியற்றினால் அந்நூலுக்கு அழகும் சிறப்பும் மேன்மையுமுண்டாகும். குறள் வெண்பாக்களைப் பூர்த்தி செய்வதாக உத்தேசித்துப் பலபெயர்களோடு நூல்கள் வெளிவந்திருக்கின்றன. செயற்கரிய செய்வார் பெரியர் என்பது குறள். அத்தகைமை வாய்ந்தவர் வள்ளுவனார். அவர் எங்கே? நாம் எங்கே! பல சமயங்களில் குறளினழகே கெட்டுவிட்டதே என்று எனக்குச்சந்தேகம் ஏற்பட்டது. குறளின் ஒப்பற்ற அழகையும் அதன் மதுர ருசியையும் ஒன்றோடும் கலவாமல் அடிக்கடி கண்டும் படித்தும் காலத்தைப் பயன்படுத்துவோமாக.

இவ்வதிகாரத்தின் குறள்களை ஒருங்கே ஊன்றிப் பார்த்தால் எனக்குத் தோற்றுவது யாதெனின், பொறையுடைமையாவது, பொறுத்தல் (அடக்கல்) மறத்தல், நொந்து திறனல்ல செய்யாதிருத்தல், தகுதியான் வென்று விடல் ஆகிய எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டதாய்க் கொள்ளு

தல் சிறப்பெனத் தோன்றுகிறது. இம்மனோபாவத்தோடு நோக்குங் காலை பொறையுடைமை சிறந்த அறமென்றும் பொறுமையுடையோன் துறவியிலும், உண்ணாது நோற்பானி லும் சிறந்தோனெனக் கருதப்படுவான் என்கிற இவ்விரண்டு பெரிய பிரிவுகள் தான் அதிகாரத்தில் நிர்ணயிக்கப்படுகிற தென்று பொருள் கொள்ளலாம். அல்லது இரண்டு இரண்டு குறளாய் எடுத்துக்கொண்டு ஐந்து பிரிவுகளாக்கிப் பொருள் கொள்ளலாமெனத் தோற்றுகிறது.

"தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றி
எம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் லென்று
பரிவதூஉம் சான்றோர் கடன்"

என்கிற நாலடியார் செய்யுள் இவ்வதிகாரத்தி னுட்பொருளை நன்றாய் விளக்குகிறது. ஆதலால் பொறுத்தலும் தீங்கிழைத்தாருக்கு இரங்குதலும் நல்லவர் கடமை.

இனிப் பருதியார் உரையை ஒவ்வொரு குறளுக்குக் காட்டிவிட்டு இக்கட்டுரை முற்றும் மற்ற உரைகளோடு ஒத்துப்பார்த்து நலமெனத் தோன்றுவதைக் கருத்தில் வைக்கும்படி நேயர்களை வேண்டுகிறேன்.

(1) பயன் விளைவு சிறிதுமன்றி, அறியாமல் மண் கெல்லுவாரையும் சுமந்து உணவுப் பொருள் தந்து அளி செய்யும் ஞாலத்தைப்போல, தங்களைக் காரணமின்றி அறியாமையினால் நிந்திப்பவரையும் பொறுத்தல் அதாவது அவர்களைக் குறித்துத் தம் மனத்தின்கண் ஓங்கி எழும் வெகுளியைத் தோன்றாமல் அடக்கி அவர்கள் நல்வழிப்படுதற்கு வேண்டுவன செயல் சிறந்ததாம்.

(2) ஒருவன் அறியாமல்செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுதல் நன்மையுடையது; அக்குற்றத்தை அவ்

விடத்தே அப்பொழுதே உள்ளத்தில் கொள்ளாமல் விட்டு விடுதல் பொறுத்தலைக் காட்டிலும் மிகுந்த சிறந்த அற மாகும்.

இந்த இரண்டு குறள்களாலும் பொறையுடைமையின் இலக்கணம் வரையறுக்கப்பட் டிருக்கிறது.

சில குற்றங்களைப் பொறுமனம் வேண்டுமென்றிருப்ப தையும் கருத்தில் வைக்க வேண்டும். அவை மறைகள் நிந்தனை, சிவ நிந்தனை முதலியன போன்றவைகளாம். திரு வாலவாய் கட்டளையில் விவரித்திருப்பதைக் காண்க.

(3) தம்மை நாடி வந்த நண்பர் அதிதிகளை உபசரிப் பதை நீக்குதல் அறிவின்மையாகும்; அறிவில்லாதவர்கள் அறியாமையால் செய்த குற்றத்தைப் பொறுத்தல் அறி வுடைமையாகும்.

இன்மையுளின்மை அறிவின்மை யென்றும் (85 அதி. 1-வது குறள்) அறிவு அற்றம் காக்கும் கருவி யென்றும் செறுவார்க்கும் உள்ளழிக்கலாகாத அரண் என்றும்(43 அதி. 1 வது குறள்) குறளிற் கண்ட பொருளே சொல்லப்பட் டிருக்கிறது. வன்மையுள் வன்மை அறிவுடைமையாகிறது. விருந்தோம்பல் ஓம்பா மடவார்களுண்டு என்று குறளில் வந் திருப்பதையும் அதுவே உடைமையுளின்மை என்றிருப்பதா லும் விருந்தொருவல் அறிவின்மை என்பது தெளிவு.

உதாரணமுகத்தால் பொறையுடைமையே அறிவுடை மையாகுமென்று இக்குறளால் இவ்வறத்தின் சிறப்பு தெளிவு செய்யப்பட்டது.

(4) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் ஆடவர் நாற்குணத்திலும் சிறந்ததான நிறையுடைமை ஒரு வன் தன் கண் நீங்காமையை வேண்டுவானுல் பொறை யுடைமையானது அவனுல் பாதுகாக்கப்பட்டு நடைமுறை யில் கண்டு ஒழுகப்படும்.

பொறையுடையாரே நிறையுடையார் (a full man). நிறையுடைய மக்கள் பொறையுடையாரா யிருப்பர் என்பது ஒரு தலை. பொறையிலார் மக்களல்ல என்று தோன்றும் வண்ணம் பொறையின் சிறப்பை நிலைநாட்டியது இக்குறள். எவ்விதத்தில் பொறையானது நற்குணங்களைப் பூர்த்தி செய்து தானுய் ஒளிருமென்பதையும், பொறுத்தார் பூமி யாள்வார் என்னும் பழமொழியின் பொலிவையும் தெளிவு படுத்துகிறது.

(5) அறியாமையினால் தமக்குத் தீங்குசெய்தாரை மன்னியாது தண்டித்தவரைக் குணத்திலும் அருமையிலும் மதிப்பிலும் சிறந்தவராக உயர்ந்தோர் தம் மனத்துள் கொள்ளமாட்டார்கள்; ஆனால் அந்த உயர்ந்தோரே தமக்குத் தீங்குசெய்தாரைப் பொறுத்தவரைப் பொன்னைப்போல் அருமையிலும் மதிப்பிலும் குணத்திலும் சிறந்தவர்களாகக் கருதித் தமது நெஞ்சத்தில் போற்றிப் பொதிந்து வைப்பர்.

பொன்னானது உலோகங்கள் எல்லாவற்றினுள்ளும் எத்தனை மெல்லியதாக அடித்துப் பரப்பினும் இழுப்பினும் ஒடியாது விரியாது நின்று பொறுமை காட்டுதலின், பொன் போல் என்று சொல்லியிருப்பதாகவும் கொள்ளலாம். ஒறுத்தாரை ஒன்றாக வையாரே, பொன்போற் பொறுத் தாரைப் பொதிந்து வைப்பர் (உயர்ந்தோர்) என்றும் அன் வயம் செய்யலாமெனத் தோன்றுகிறது. பொன் உவமையை 27-வது அதிகாரம் 7-வது குறளினுபயோகப் படுத்தியிருப் பதைக்காண்க. அதாவது "சுடச்சுடரும் பொன் போலொளி விடுந் துன்பஞ் சுடச்சுட நோற்கிற் பவற்கு."

(6) அறியாமல் தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித் தவருக்கு உண்டாவது, "கருதியதை முடித்தேன்" என்னும் தருக்கால் எழும் - அவ்வொறுத்த பொழுதே உண்டாகும்- இன்பமே யாகும்; ஆனால் அவரைப் பொறுத்தவருக்கு உண்

டாவதோ அவர் சாம் அளவும் இன்பமும், செற்றபின் உல கம் உள்ளளவும் நிலை நிற்கும் புகழுமாம்.

ஒரு நாள் என்பது ஈண்டு சிறிது பொழுது என்னும் பொருளில் கூறப்பட்டிருக்கிறதென்று பருதியார் கூறும் உரை பொருத்தமானது.

இவ்விரண்டு குறளாலும் ஒறுத்தல் சற்றேனும் இன் பத்தை விளைவிக்காதென்றும், ஒறுத்தாரை உயர்ந்தோர் மனிதனெனக் கருதாரென்று எதிர்மறைமுகத்தால் பொறை யின் சிறப்பைக் காட்டி, விஷயமாய் நியாயம் காட்டி, காரண முகத்தால் பொறையின் பெருமை சீர்தூக்கப்படுகிறது. ஒறுத்தலிற் பொறுத்தலே நலம்.

(7) அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் முத லிய கெட்ட குணங்களாலேற்படும் நீதியில்லாத செயல்களைப் பிறர் தனக்கு அறியாமையாற் செய்தாலும் மனம் வருந்தி அவர்கள் மேல் பரிவு கொண்டு அவர்களை ஒறுக்காது பொறுத்தல் அறமாகும்; நீதியுமாகும்.

அறம் யாதென அறன் வலியுறுத்தலிற் சொல்லப் பட் டது. திறனுள்ளது மடவார் பொறை என்று மூன்றாவது குறள் அறுதியிட்டது. ஆகவே, திறனல்லது பொறாமல் ஒறுத்தல்.

பிறர் தற்செய்யினும் என்றிருப்பதால் வேறொருவ ருக்கு இகழ்தல் செய்தால் தண்டித்தலும் தகைமையாகும்.

(8) கல்வி, செல்வம், அதிகாரம், ஆள்கட்டு ஆகியவற் றின் மிகுதியால் தருக்கிக் குற்றமுள்ள செயல்களைத் தங்கள் அறியாமையினால் செய்தவர்களை அறிவுடையோர் தங்க ளுடைய நடுவு நிலைமையால் வென்றுவிடக்கடவர்.

இவ்விரண்டு குறள்களாலும் பொறுத்தல் மறத்த லோடு திருப்தி யடையாமல் மனம் நொந்து பரிவு காட்டித் தகுதியால் வென்றுவிடலும் பொறையுடையார் கடமை

யென்றார்கிறது. எவ்வழியிலோ இகழ்வாரை நல்வழிப்படுத்துவதும் சான்றோர் கடனாகும். பொறையுடையோரால் சாதிக்க வல்லாத தொன்றுமிலதாம்.

(9) நெறிகடந்து குற்றம் செய்பவருடைய வாயினின்று வரும் தீச்சொற்களைப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றலுடையவர் துறவு நிலையை அடைந்தவர்களைக் காட்டிலும் துப்புரவு உடையவர்களாவார்கள்.

நமது காயத்திற்குத் தீங்கு செய்தால் வடுவு மறைந்துவிட்டால் செய்த துன்பத்தை மறந்துவிடலாம். தீச்சொற்களைப் பொறுத்தல் மறத்தல் மிகவும் கடினம். ஆகவே இன்னாச் சொற்களைப் பொறுப்பவர் நோன்பு, தவம் செய்பவர்களைக் காட்டிலும் மேன்மையுடையவர்களே. "வைததனை இன்சொல்லாற் கொள்வான்" மெய்ப்பொருள் கண்டு வாழ்வான் என்பது திரிகடுகம்.

(10) பிறர் அறியாமையினால் கூறும் துன்பம் தரும் சொற்களைப் பொறுப்பவர்களுக்குப் பின்னர் உயிர்க்கு உறுகண் செய்யக்கூடிய ஊனைத் தவிர்த்துச் சருகு முதலியன அருந்தித் தவம் செய்வார் பெரியவர் என்று சொல்லப்படுவர்.

உண்டி சுருங்குவதால் உண்டாகும் துன்பத்தைப் பொறுத்தலைக் காட்டிலும் இன்னாச் சொல் பொறுத்தல் மேம்பாடுடையதாம்.

இவ்விரண்டு குறள்களாலும் துறவிகள், தவம் செய்வார்கள் பெரியவர்களேயானாலும் பொறையுடையார் தூய்மைக்குச் சற்று தாழ்ந்ததேயென விளக்கிக்காட்டிப் பொறையின் சிறப்பு போற்றப்பட்டது. தூய்மை என்பது அவாவின்மை. நிராசையாகிய நற்குணம் வாய்ப்பது கடினம். இதை அடைவதற்குத்தான் துறவு பூணலும், தவம் செய்தலும் நோன்பிருத்தலுமாகிய சாதனங்களைக்கடைபிடிப்பது.

பொறையுடையார் நிறையுடையா ராதலாலும் தூய்மை யுடையாராதலாலும் பொறை என்னும் கருவியால் பூரண மனிதனாய் ஒவ்வொருவனும் ஆகலாமென்றாகிறது.

ஆகவே, பொறுத்தல் நன்று, மறத்தல் அதனினும் நன்று; இரக்கம் காட்டல் அதனினும் நன்று; தகுதியால் வென்று விடல் அதனிலும் நன்றே. அதுவே அறம்; அதுவே நல்லொழுக்கம்; அதுவே தூய்மை. பொறையுடைமை வாய்க்குமோ நமக்கு! சுபம், மங்களம், சாந்தம்.

---

# தசகாரியம்

[தசகாரியத்தை யுரைக்கும் நூல்களுட் பழைமையானது ஸ்ரீகாழித்தத்துவனார் அருளிய **உண்மைநெறி விளக்கம்.** அஃது ஆறு விருத்தங்களாலாய சிறிய சாத்திரம். **சிவநெறிப் பிரகாசவுரையில் தசகாரியக் கட்டளை**யென ஒரு நூல் இருப்பதாகக் குறிக்கப்பட்டுளது. திருவாவடுதுறைப் பெரியாராகிய அம்பலவாண தேசிகர், தக்ஷிணாமூர்த்தி தேசிகர், சுவாமிநாத தேசிகர் என்னும் மூவரும் அருளிய **தசகாரியம்** என்னும் மூன்று பண்டார சாத்திரங்களும் தசகாரியங்களை விளக்குவனவே. திருவாரூர்ச் சிதம்பரநாத தேசிகரியற்றிய **தசகாரியம்** விரிவான நூல். சிவஞான வள்ளலார் சாத்திரங்களுள்ளே **பதிபசுபாச விளக்கத்தும் உபதேசமாலையினும்** தசகாரியங்களினியல்பு ஓதப்பட்டது. **ஞானாமிர்தக் கட்டளை சிவப்பிரகாசக் கட்டளை**களினிறுதியில் தசகாரியங்கள் கூறப்பட்டுள்ளன. இங்குப் பதிப்பிக்கும் **தசகாரியம்** இந்நூல்களுட் குறிக்கப்பட்ட தசகாரியங்களையே விளக்குவது. எதோ ஒரு சாத்திர உரையெழுதிய பழைய எட்டுப்பிரதி யொன்றில் உரைச்சூத்திரங்களென எழுதப்

பட்டதென்று தெரிகிறது. மேல் விவரமொன்றும் அறியக்கூட வில்லை.

தருமபுரத்துக் குரு முதல்வர் அருளிய **திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்** என்னும் நூலுள் விளக்கப்பட்ட தசகாரியம் வேறு வகையாயிருக்கும்.

இனிக் குமாரதேவர் சாத்திரங்களுள் ஒன்றாகிய **வேதாந்த தசகாரியக் கட்டளை** மாயாரூபம் மாயாதரிசனை மாயாசுத்தி சிவரூபம் சிவதரிசனை சிவசுத்தி பிரமரூபம் பிரமதரிசனை தேககைவல்லியம் விதேககைவல்லியம் என்னும் பத்தும் உபநிடதங்களி லோதப்பட்டனவென்று குறித்து அவற்றை விளக்கும்.

S. அனவரதவிநாயகம் பிள்ளை.]

## தத்துவ ரூபம்

மண்முதல் நாதம் வரையுள தத்துவங்
கண்ணிய தனுவுங் கரணமும் புவனமும்
போகமும் புரிவும் பிரேர கமுமாய்
நின்ற வடிவைத் தனக்குவே றாகக்
காணு மவதரந் தத்துவ ரூபம். (க)

## தத்துவ தரிசனம்

குறித்த தத்துவக் குழாம்பல வவைதாம்
மாயை யிரண்டின் காரிய மெனவுஞ்
சடம்அவை யெனவுந் தன்னா லறியப்
பட்டன வெனவுந் தன்னறி வதனிற்
காணு மவதரந் தத்துவ தரிசனம். (உ)

## தத்துவ சுத்தி

தத்துவ விகற்பச் சுட்டறி வருளிற்
றுணில் லாதவை தனைத்தாக் காது

கருத்தின் விரும்பா தறிந்து பொய்யெனக்
கண்டு நீங்கித் தானதை யின்றி
அவற்றின் வேறாய் எங்கு நிறைவாய்
நித்திய வறிவாய் நிற்கு முறையை
அறிந்து நிற்றல் தத்துவ சுத்தி. (௩)

## ஆன்ம ரூபம்

குருபர னருளாற் குறித்த தன்னையுந்
தன்பந்த மாகுந் தத்துவச் செயலையும்
சகச மறைப்பா மாணவத் தினையும்
நீங்கித் தானறி நெறியையும் அவன்றன்
ஞான மறிவுக் கறிவாய் நின்றுப
கரிக்கு நெறியையுந் தன்னறி வின்கண்
விளங்கக் காணுதல் ஆன்ம ரூபம் (௪)

## ஆன்ம தரிசனம்

தன்செய லெங்கும் தோன்றாது தத்துவ
தாத்து விகங்களை யென்ன தென்றும்
பசுவி னறிவையா னென்றும் நின்ற
அசத்திய போத மகற்றிச் சுட்டுப்
போதங் கழலல் ஆன்ம தரிசனம் (௫)

## ஆன்ம சுத்தி

தன்சுட் டறிவுதா னெங்குந் தோன்றாது
கெட்டரு ளதனாற் றற்பூ ரணமெலாம்
அடங்கித் தன்செயல் அருட்செய லாகித்
தன்னை ஞான மடக்கிய முறைமையும்
தான்ஞா னத்தே அடங்கிய முறைமையும்

எங்குந் தோன்றுது பெத்தத்தி னிலை
தேகந் தானாய்த் தான்தேக மாகி
நின்ற வாறு முதல்வன் றானாய்
நின்ற வவதாரம் ஆன்ம சுத்தி (௬)

## பரரூபம்

வேறற நிற்கு மெய்ம்முறை யதனை
மானிட னாகிவந் தருளுந் தமகுரு
முதல்வ னென்ன முறையிற் கண்டு
நின்ற வவதாரம் பரரூப மாகும் (௭)

## பரதரிசனம்

ஞானந் தோன்றவே நம்முடைய முதல்வன்
பாதம் யாது வதனம் யாது
திருமுடி யாதெனத் தெள்ளிதின் அறிந்து
சத்தியப் பொருள்வே றிலையெனத் தெளிந்து
சகல கேவலந் தானறப் போத
பூரணங் கழன்று பூரண ஞானம்
பொருந்தத் துய்த்தல் பரதரி சனமாம் (௮)

## பரயோகம்

அருளே யனைத்து மாமெனக் கண்டு
சித்துஞ் சடமு மொன்றிலும் பொருந்தா
ஒருசெய லில்லை யென்னு முறைமையை
யுள்ளவா கண்டு மெய்ப்பொரு ளதனோ
டிசையு மவதாரம் பரயோ கம்மே (௯)

### பரபோகம்

இவனது நிறைவு மவனது செய்கை
இவன தறிவு பூரண மெல்லாம்
அவன தின்பப் பூரண மாகவும்
அவன தறிவு பூரண மெல்லாம்
இவன தின்பப் பூரண மாகவும்
வேறறத் தோன்றி நின்று மெய்யாகத்
தனதின்ப நிறைவிவ னனுபோக நிறைவை
யமிழ்த்தி நிற்ற லதுபர போகம் (சO)

---

## பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் 10-வது ஆண்டு குருபூசை

இக்குருபூசை, திருவான்மியூர் மயூரபுரத்தில் மஹாதேஜோ மண்டல சபையாரால் 8-6-39-ல் கொண்டாடப்பட்டது. பல சைவ சபையினரும், அடியவர்களும் குழுமி, சுவாமிகள் சந்நிதானத்தில் வந்தனை வழிபாடு செய்து மகிழ்ச்சி யடைந்தனர்.

---

## மாடம்பாக்கத்தில் திருஞானசம்பந்தர் திருநாள்

தாம்பரம் ரயில்வே நிலயத்துக்கு 4 கல் தூரத்திலுள்ள மாடம்பாக்கம் என்னும் க்ஷேத்திரத்தில், சைவசித்தாந்த மகாசமாஜத்தின் சார்பாக, திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் அவர்களாலும், திரு. ச. நடேச முதலியார் அவர்களாலும், அன்பர் சிலர் துணைகொண்டு, வைகாசி மூலத்தில் (3-6-39) திருஞானசம்பந்தர் திருவிழா கொண்டாடப்பெற்றது. திரு. பூ. சமரபுரி முதலியார் அவர்கள் ஆளுடைய பிள்ளையாரின் அரும்பெரும் அற்புதச் செயல்களை எடுத்து விளக்கிச்சொற்பொழிவு ஆற்றினார்கள். கிராமவாசிகள் பலர் கண்டு கேட்டு இன்புற்றார்கள்.

# திருவாசகம்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

**திருச்சதகம் - ஆனந்தத்தழுந்தல் 6-வது பாட்டு**

*நினைப்பதாக சிந்தைசெல்லு மெல்லையே யவாக்கினாற்*
*றினைத்தனையு மாவதில்லை சொல்லலாவ கேட்பவே*
*அனைத்துலகு மாயநின்னை யைம்புலன்கள் காண்கிலா*
*எனைத்தெனைத்த தெப்புறத்த தெந்தைபாத மெய்தவே.*

பதவுரை :—எந்தை பாதம் எய்த - (ஆனந்தத் தழுந்துதலுக்காக) எனது தந்தையாகிய சிவபெருமானுடைய திருவடியைச் சேர்தற்கு.

சிந்தை - (எனது) மனம்.

நினைப்பது ஆக - அத்திருவடியை நினைப்பதற்காக.

செல்லும் - முயலும்,

தினைத்தனையும் ஆவதில்லை - ஆனால் அங்ஙனஞ் செய்ய அதற்குச் சிறிதும் முடியவில்லை.

எல்லை ஏய வாக்கினால் - அளவுபொருந்திய வாக்கினால்.

தினைத்தனையும் ஆவதில்லை-(அத்திருவடியைப் புகழ்ந்து சொல்ல) சிறிதளவும் முடியவில்லை.

சொல்லல் ஆவ கேட்பவே - ஏனென்றால் சொல்லத் தகுந்த பொருள்களெல்லாம் காதினால் கேட்கத்தகுந்த அளவுக்குட்பட்ட பொருள்களே. (அளவுக்குட்பட்டன என்றபடி.)

அனைத்தும் உலகும் ஆய நின்னை - உலகம் முழுதும் எள்ளுக்குள் எண்ணெய் போலக் கலந்திருக்கிற (அந்தரியாமியா யிருக்கிற) உன்னுடைய திருவடியை.

ஐம்புலன்கள் காண்கிலா - அறிவு கருவிகள் (ஞானேந் திரியங்கள்) ஐந்தும் அறிதற்கு ஆற்றலுடையனவல்ல.

அது - அத்திருவடி.

எனைத்து எனைத்து - எந்த அளவினது, எந்த அளவினது (அளவிற்குட்படாதது என்றபடி)

எப்புறத்து அது - எந்த இடத்திலுள்ளது, ஓரிடத்திலன்றி எங்கும் நிறைந்திருப்பது என்றபடி)

விளக்கவுரை :—பாதம் - இரண்டு திருவடிகள்.

எய்த என்பது வருங்கால வினையெச்சப் பொருளில் வந்தது.

செல்லும் - எழும் ; முயலும். தினைத்தனையும் ஆவதில்லை என்ற சொற்றொடரைச் செல்லும் என்பதின் பின்னும் சேர்த்துப் பொருள் உரைக்க.

கேட்பவே என்பதிலும் எய்தவே என்பதிலும் உள்ளவ - அசைகள்.

தினைத்தனையும் ஆவதில்லை - தினை - ஒரு சிறு தானியம். சிறிய அளவைக் குறிக்கிறது. தினைத்தினை அளவு 'உரையாலுணரப்படாத அடி' என்று திருநாவுக்கரசு அடிகள், திருவதிகை வீரட்டானம் திருத்தாண்டகம் எ-வது பாட்டில் கூறியிருத்தல் காண்க.

ஐம்புலன்கள் காண்கிலா - ஐம்புலன்கள் இங்கே ஐம்பொறிகளைக் குறிக்கிறது. காணுதல் இங்கே கண்ணால் கண்டும், செவியால் கேட்டும், நாவாலுண்டும், மூக்கால் மோந்தும், மெய்யாற் றீண்டியும் அறிதலைக் குறிக்கிறது.

கில் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை.

எனைத்து எனைத்து - அடுக்குச்சொல், 'அகல மளைக்கிற் பாரில்லா அடி' என்று திருநாவுக்கரசு அடிகள் திரு

வதிகை வீரட்டானத் திருத்தாண்டகம் ௭-வது பாட்டில் கூறியிருத்தல் காண்க.

எப்புறத்து அது - "திருநாவுக்கரசு அடிகள் "வானைக் கடந்தண்டத்து அப்பால் மதிப்பன் - .......ஐயாறனடித் தலமே" என்று திருவையாறு திருவிருத்தம் ௮-வது பாட்டிலும்,

" எழுவா யிறுவாயிலாதன........ஐயாறனடித்தலமே" என்று பிறிதோர் திருவையாறு திருவிருத்தம் ௫-வது பாட்டிலும் இக்கருத்தைக் கூறியிருத்தல் காண்க.

சிவபெருமானுடைய திருவடியை மனம் ஐம்பொறிகளாகிய கருவிகள் அறியமுடியாவென்றும், நா, உரைக்க முடியாதென்றும் இப்பாட்டுக் கூறுகின்றது. ஆனந்தத் தழுந்தலுக்குஆன்மா சிவபெருமானோடொன்றுபட்டு அத்துவிதமாய்க் கலந்து நின்று அவனுடைய திருவடியை உணர வேண்டுமென்பது கருத்து.

---

## கோவூரில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் சொற்பொழிவு

கோவூரில், இவ்வாண்டு வைகாசித் திங்களில் நடந்தேறிய பிரமோற்சவ காலத்தில், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், " விநாயகர் பிரபாவம், பெரியபுராணம், முப்பொருளுண்மை, நால்வர் மாண்பு, அஞ்செழுத்துண்மை, அறுமுகச்சிவம், கண்ணப்பர், அஷ்டபுஷ்பம், மார்க்கண்டேயர், பார்வதி திருமணம்" என்னும் பொருள்கள் பற்றி நாடோறும் சொற்பொழிவாற்றினார்கள். சென்னையிலும், அதற்கடுத்துள்ள கிராமங்களிலுமிருந்து அன்பர்கள் போந்து சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புற்றார்கள்.

# " திருவாரூர் " என்ற கட்டுரையைப் பற்றிய ஒரு குறிப்பு

[கோவை கிழார்]

சித்தார்த்தத்தின் நாளது வைகாசித் திங்கள் வெளியீட்டில் திருவாரூரரைப் பற்றிய கட்டுரையில் காவிரி யாற்றைப்பற்றிக் கூறுகையில், அதன் ஆசிரியர் " கொங்கு நாட்டில் திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் இடத்தில் காவிரி, மலையினின்றும் கீழ் இழியும் நிலையைக் காட்டுவது போலப் பாடுகிறார், 'கல்லை யுந்திவளம் பொழிந்திழி,' 'காவிரிப்பாடு தண்புனல் வந்திழி '........என்னும் தொடர்கள் நோக்கத்தக்கன" என்கின்றார். இவ்வாக்கியங்களைப் படிக்கின்ற அன்பர்கள் மனதில், கொடுமுடியில் மலை உண்டு என்றும், அம்மலையினின்று காவிரி விழுந்து ஓடும் என்றும், அதனைத் திருவாரூரரும் எடுத்தாண்டிருக்கின்றார் என்றும்தோன்றும். ஆனால் உண்மையில் கொடுமுடியில் மலை இல்லை; அங்கே காவிரி மலை வீழ்ச்சியாக ஓடுவதில்லை; திருவாரூரரும் அவ்வாறு சொல்லவுமில்லை.

திருப் பாண்டிக் கொடுமுடித் தேவாரத்தில் 4-ம் பாடலில் " பொன்மாமணி கல்லையுந்தி வளம் பொழிந்திழி காவிரி " என்றும், 6-வது பாட்டில் "அந்தண் காவிரிப்பாடு தண்புனல் வந்திழி" என்றும் வந்துள்ளன. இவ்வடிகளில் "மலையினின்றும் கீழ்இழியும்" என்ற பொருள் இல்லை. முதல் மேற் கோளுக்குப் ' பொன்னையும் மணியையும் கல்லையும் உந்திக்கொண்டு வளப்பம் தந்து ஓடும் காவிரி ' என்று தான் பொருள். இவ்வருணனை எல்லா நதிகளுக்கும் பொதுவாய்க் கூறப்படுவதாகும். (சம்பந்தர் காளத்திப் பதிகத்தில்

காண்க) இங்கே கல் என்பது பருக்கைக் கல்லே அன்றி மலையல்ல. காவிரி மலையிலிருந்து விழுவது குடகு நாட்டில் தான். பிறகு சிறிதளவாகச் சிவன் சமுத்திரத்திலும், ஹொகனக் கல்லிலும் அது நீர் வீழ்ச்சியாக விழுகின்றது. பிறகு 75 கல்லளவில் சமத்தரையில்தான் காவிரி ஓடுகிறது. கொடுமுடிக் கருகில் மலைகளாவது பெரும் பாறைகளாவது காவிரி வழியில் இல்லை. ஆகவே காவிரி மலையினின்று கீழ் இழிவது கிடையாது. இரண்டாவது மேற்கோளிலும் ‘இழி’ என்றால் ஓடும்என்ற பொருளில் தான் கொள்ளவேண்டியது. கீழே மேற்கோளாகக் சாட்டியிருக்கும் திருத்துருத்தித் தேவாரத்தில் “ சுழிந்திழி காவிரி ” என்பதைக் காண்க. அங்கு மலையில்லை அல்லவா ?

மேலும், திருத்துருத்தி, திருவேள்விக்குடிப் பதிகத்தை மேற்கோளாகக் கொண்டு “ ஊருமா தேசமே மன முகந்துள்ளிப் புள்ளினம் பலபடிந் தொண்கரையுகளக் காருமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க் கவரிமா மயிர் சுமந்து ஒண் பளிங்கிடறித் தேருமாகாவிரி” என்ற அடிகளை எடுத்தாண்டு அதன் கீழ்,—

“இங்கே கருங்கடல் வங்காளக் குடாக்கடலைக் குறித்தது என்பது வெளிப்படை. அதனால் தான் சென்னையின் கீழ்க் கடற்கரையை கருங்கடற்கரை அல்லது கருமணற்கரை (Coramandal Coast) என்றும் அழைக்கின்றார்கள்.” என்று கட்டுரையில் ஆசிரியர் கூறுகின்றார்.

கடல் நீர் கருமையாகத் தோன்றுவதால் கருங்கடல் என்று பொதுவாக இங்குத் திருவாரூரர் குறித்தனரேயன்றிக் கருமணல் கரையைக் கொண்ட வங்காளக் குடாக் கடலை எண்ணிப் பாடினார் என்று கொள்ளுவதற்கிடமில்லை. புலவர்கள் எல்லாக் கடல்களையும் கருங்கடல் எனல்மரபு. சென்னைக் கடற்கரையைக் “கருங்கடற்கரை அல்லது கருமணற்கரை”

என்று வழங்கி வந்ததினால் மேற்கு நாட்டார் அதனை (Coramandal Coast) என்று பெயரிட்டார்கள் என்று சொல்வது விபரீதமாகும். சென்னைக் கரைமணலைக் கருமணல் என்று எவரும் கூறார். அது கரு நிறத்தைக் கொண்டதென்று பார்த்தவர்கள் கூறார்கள். இக்கரைக்கு எந்த முற்கால பிற்கால நூலிலும் இப்பெயரைக் காணோம். புதிதாக வந்த ஆங்கிலேயனொருவன் தான் தன் அரைகுறை ஆராய்ச்சியில் Coramandal Coast என்பது "கருமணற்கரை" என்பதன் மருவு என்று எழுதிவிட்டான். அதைப் பிடித்துக்கொண்டு சிலஉரையாளர்கள் நம்பி எழுதுகிறார்கள். Coramandal என்பது சோழமண்டலம் என்பதன் வாய் திறம்பா மரூஉவே அன்றிப் பிறிதல்ல. தரங்கம்பாடி Tranquebar எப்படி ஆயிற்று? கவனியுங்கள். சென்னையில் இவ்வித விபரீதங்கள் சகஜமே. Hamilton Bridge என்பது நாளாவட்டத்தில் அம்பட்டன் வாராவதியாகிப் பிறகு ஆங்கிலத்தில் Barbers' Bridge என்று எப்படி மொழி பெயர்க்கப்பட்டதோ, அதுபோலவே சோழ மண்டலக்கரை Coramandal Coast ஆக, இப்போது அதைக் கருமணற் றரை ஆக்கவேண்டும் என்று சிலர் முயல்கின்றனர். இவ்வாறே சில புலவர்கள் எழுதத் தொடங்கினால் சில ஆண்டுகளில் இவ்வித விபரீத ஆதாரம் பலப்பட்டு விடும் அல்லவா?

Coramandal என்ற பதத்திற்கும் கருமணலுக்கும் ஏதாவது ஓசை ஒற்றுமை இருக்கலாம். ஆனால் கருங்கடலுக்கும் Coramandalக்கும் ஓசை ஒற்றுமை சிறிதேனும் இல்லையே! எனவே, திருவாரூரர் கருங்கடல் என்ற சொற்களை வைத்துப்பாடிய காலத்தில் சென்னைக் கருமணல் தரையை எண்ணிப் பாடியிருக்கக் கூடுமா? என்று சிறிது எண்ணுமிடுங்கள்.

# “ சேரவாரும் சகத்தீரே ”

அழைக்கிறார்! “சேரவாருஞ் சகத்தீரே” என்று அழைக்கிறார். அழைக்கிறவர் யார்? தாயுமானப் பெருந்தகையார். எப்படி அழைக்கிறார்? காகமுறவு கலந்துண்ணக் கண்ட உலகீர்! வாருங்கள்! வாருங்கள்! என்று அறைகூவி அழைக்கிறார். ஏன் அழைக்கிறார்? புசிப்பதற்கு அழைக்கிறார். எதைப் புசிப்பதற்கு அழைக்கிறார்? சிவபோகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ என்று அதைப் புசிப்பதற்கு அழைக்கிறார். ஏன் விரைந்து அழைக்கிறார்? எடுத்த தேகம் விழும்; அதற்குமுன் வாரும் என்று கூவுகிறார்.

தேகம் எப்போதாயினும் நழுவிவிடும். அதற்கு முன்னே அருட்கோலத்தைக் காண வேண்டுமென்பதே தாயுமானார் கருத்து. அதனை மற்றோரிடத்தில்,

“ என்றும் அழியும் இக்காயம் - இத்தை
ஏதுக்கு மெய்யென் றிருந்தீர் உலகீர்
ஒன்று மறியாத நீரோ - யமன்
ஓலைவந் தாற்சொல்ல உத்தரம் உண்டோ ”

“ உண்டோ நமைப்போல வஞ்சர் - மல
மூறித்ததும்பும் உடலை மெய்யென்று
கொண்டோ பிழைப்பதிங் கையோ - அருட்
கோலத்தை மெய்யென்று கொள்ள வேண்டாவோ ”

என்றும் விளக்கியருளியது காண்க.

நமது தாயுமானார் தாம் கண்ட அகண்டாகாரக் காட்சியை, உலகினர் கண்டு இன்புற அழைக்கும் பெற்றியை என்னென்று கூறுவது! தாம் பெற்ற இன்பத்தை வையகத்தாரும் பெறவேண்டுமென்ற கருணை வெள்ளம் அவர்பாற் பொங்கித் ததும்பியது.

"எவ்வுயிரும் எம்முயிர்போல் எண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

என்று இறைவனை வேண்டிப்பெற்ற அருள் நாட்டமுடைய பெரியாராதலால், அவர் உயிர்கள்மீது கருணை காட்டுவதே பெரும்பேறெனக் கருதினர் எனத் தெரிகிறது. உயிர்கள் மாட்டு அன்பில்லாதவர் ஈசனிடத்தும் அன்பில்லாதவர் என்னுங் கருத்தைச் சிவஞான சித்தியாரில்,

ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்
பேசுவதென் அறிவிலாப் பிணங்களை நாம் இணங்கிற்
பிறப்பினிலும் இறப்பதினும் பிணங்கிடுவர் விடுநீ
ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு
அவர்கருமம் உன்கரும மாகச்செய்து
கூசிமொழிந் தருள்ஞானக் குறியால் நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.

என்று அருணந்தி சிவம் விளக்குவதால் அறியலாம். அப்பமூர்த்திகளும் மக்கள் மீது கொண்ட பேரிரக்கத்தால்,

"மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈச னெனும்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே"

என்று அன்பு சால் மொழியால் அழைத்து உணர்த்தினர்.

இத்தகைய அருண் மூர்த்திகள் பலர் நந்தமிழ் நாட்டிற் றோன்றி மக்கட்குச் செய்த பேருதவியைத் தமிழர்கள் மறந்து மதியாது விடுத்த பெருங்குறையா லன்றோ இந்நாடு இடுக்கணுற்று அல்லலுறுகிறது. இத்தகைய அறவோர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்களை ஓதி, அவற்றின் பொருளறிந்து அச்செந் நெறிபற்றி ஒழுகவேண்டியது நமது கடமையாம். தாயுமான அடி

கள் நந்தமிழ் நாட்டில் தோன்றிய தவப்பெருஞ் செல்வர். கல்லுங்கரைந் துருகும் தீந்தமிழ்ப் பாடல்களை உலகிற்கீந்த பெரியார். சன்மார்க்கந் தழைக்கச்செய்த சற்குரு. சாதி மதங்கடந்த சித்தாந்த சைவ ஆசிரியர். அவரது திருப்பாடல்கள் குன்றின்மேலிட்ட விளக்கெனத் தமிழ் நாட்டிற் பொலிகிறது. அவர் பாடலாகிய அருளமுதை உண்டுகளிக்கத் தமிழரிற் பலர் முன் வருவதில்லை. அவர் பெயரால் எத்தனை அறநிலயங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன? தாயுமானார் வேறு நாட்டிற்றோன்றி யிருப்பாராகுல் அந்நாட்டார் அவர் தம் வாய்மொழியைப் பொன்னெழுத்தால் பதித்து வைப்பாரன்றோ? தமிழர்களே! ஆடம்பரத்தால் உங்கள் சீரையும் சிறப்பையும் அழிக்க ஊரை மயக்கித் திரியும் போலிக் குருமார்களை நம்பி அடிமை பூண்டொழுகும் பித்தை அகற்ற முன் வாருங்கள். அன்பர்களே! உங்கள் மீது பேரிரக்கங் கொண்டு சிவானந்த வெள்ளத்தில் நீங்கள் மூழ்கித்திளைக்கச் "சேரவாரும் சகத்தீரே" என்று அழைக்கும் தாயுமானார் போன்ற அருளாளர் அழைப்புக்கிரங்கி அணிவகுத்துச் சென்று அருளமுதுண்டு இன்புற்றிருப்பீர்களாக.

"காகம்உறவு கலந்துண்ணக் கண்டீர்
அகண்டா காரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித்
ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிடநாம்
இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேரவாருஞ் சகத்தீரே"

—(ப - ர.)

# பற்று

பற்று, பாசம், பந்தம், அவா, ஆசை என்பன ஒரு பொருட் சொற்கள். பற்று, அகப்பற்று புறப்பற்று என இருவகைப்படும். இவை முறையே நான் எனது எனவும், அகங்காரம் மமகாரம் எனவுஞ் சொல்லப்படும். தன்னிடத்தில் வைத்த ஆசை அகப்பற்றும், தன்னைச் சார்ந்த பொருள்களாகிய மனைவி மக்கள் முதலியவர்களிடத்தும், மாதரிடத்தும், பொன்பூமி முதலியவற்றினிடத்தும் வைத்த ஆசை புறப்பற்றுமாம்.

ஆன்மா என்று உண்டோ அன்றே அதனிடத்தில் பாசமாகிய பற்றும் உண்டு. ஆன்மா என்றும் தனித்திராது. அது பாசத்தோடாவது கூடியிருக்கும்; சிவத்தோடாவது கூடியிருக்கும். அது அசத்தாகிய பாசத்தோடு கூடி இருக்கும்போது அசத்தாகவும், சத்தாகிய சிவத்தோடு கூடி இருக்கும்போது சத்தாகவும் இருக்கும். அதனால் அது சதசத்து என்று சொல்லப்படும். அது அசத்தாகிய பாசத்தோடு கூடியபோது பசு என்னப்படும். பாசமாகிய ஆணவ மலத்தால் விழுங்கப்பட்டிருத்தலால் அணு என்றுஞ் சொல்லப்படும். அது ஆணவமலத்தோடு கூடியபோது ஆன்மா வேறு ஆணவமலம் வேறு என்றறியபடி ஆணவ மலமேயாயிருக்கும்; ஆணவமலத்தினின்றும் நீங்கிச் சிவத்தோடு கூடியபோது சிவம் வேறு தான்வேறு என்றறியபடி சிவமேயாயிருக்கும். இவ்வாறு சிவமும் ஆன்மாவும் பாசமும் ஒற்றுமைப்பட்டு நின்றநிலை அத்துவித நிலையென்று சொல்லப்படும். ஆன்மா பாசத்தோடு அத்துவிதமாக (இரண்டறக் கலந்து) நிற்கும்நிலை பெத்த நிலையெனவும், சிவத்

வோடு இரண்டறக் கலந்திருக்கும் நிலை முத்திநிலை யெனவுஞ் சொல்லப்படும்.

ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ.
—தாயுமான சுவாமிகள்

ஆன்மா பெத்தநிலையிலே அஞ்ஞானத்தினாலே பொருளல்லாதனவாகிய தேகாதிப் பிரபஞ்சங்களைப் பொருளென மதித்து அவற்றினிடத்தில் மேலும் மேலும் பற்றுவைத்தலினால் ஓயாமல் பிறந்து பிறந்துழல்கின்றன.

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானா மாணாப் பிறப்பு —திருக்குறள்

ஆதலால் மோட்சாபேட்சை யுடையவர்கள் தேகாதிப் பிரபஞ்சங்களிடத்தில் பற்று ஒழிந்திருத்தல் வேண்டும். மோட்சம், முத்தி, வீடு என்பன ஒரு பொருட்சொற்கள். இவையாவும் (பற்று) விட்டிருத்தல் என்னும் பொருளையே தருதலால் பற்றுவிட்டிருத்தலே முத்தி யென்னப்படும். (வீடு என்பது விடுதல் என்னும் சொல்லின் திரிபாகிய முதனிலை திரிந்த தொழிற்பெயர்.)

மனிதர்கள் பற்றை யொழிப்பதற்குப் பற்பல உபாயங்களை யநுசரிப்பர். சிலர் துறவறத்தால் பற்றையொழிக்க முயலுவர். சிலர் தவம் யோகம் முதலியவற்றால் அதை யொழிக்கப் பார்ப்பர். சிலர் ஞான நூலாராய்ச்சியால் அதனை நீக்க வழிதேடுவர்.

இவ்வுபாயங்களால் பற்றை யொழிப்பது கடினமாகும். பற்றை யொழிப்பதற்குப் பத்தி மார்க்கமே எல்லாவற்றுள்ளும் எளியதும் மேலானதுமான மார்க்கம்.

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்

அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்போன் மணியினை யெய்தவொண் ணாதே.—திருமந்திரம்

ஒரு பச்சிலையைப் பற்றி நின்றதோர் புழு அப்பச்சிலையை விட்டு நீங்குவதற்கு வேறொரு பச்சிலையைப் பற்றுவதுபோல், எப்போதும் ஒன்றைப் பற்றி வர்த்தித்தலையே இயற்கையாகவுடைய ஆன்மாக்கள் தாங்கள் பற்றிநின்ற பிரபஞ்சப் பற்றைவிட்டு நீங்குவதற்குப் பற்றற்ற கடவுளைப் பெரும் பற்றாகப் பற்றவேண்டும். கடவுளிடத்தில் பற்று உயர உயரப் பிரபஞ்சப்பற்று தானே நீங்கிவிடும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. —திருக்குறள்

அன்றியும், "பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளுஞ் சிற்றுயிர்" எனக் குமாரகுருபர சுவாமிகள் அருளிச் செய்தவாறு, தாம்பெற்ற பொருள்களைச் சிறியனவாகவும் பெறாத பொருள்களைப் பெரியனவாகவும் எண்ணுதல் உயிர்களின் இயற்கை. உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் ஒன்றினொன்று உயர்ந்தனவும் தாழ்ந்தனவுமாக இருக்கும். ஆதலால், முன்னே ஒரு பொருளின்கண் பற்று வைத்து அதை வருந்தித்தேடி யடைந்த பிறகு அதனினும் பெரிதாகிய வேறொரு பொருளை நோக்க இதற்குமுன் வருந்தித்தேடி அரிதிற் கிடைத்தபொருள் சிறிதாகத் தோன்றும். அது சிறிதாகத் தோன்றுதலும், அதனினும் பெரிதாகிய வேறொரு பொருளிடத்தில் ஆசை யுண்டாகிறது.

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீதிலே
யாணைசெல வேநினைவ ரளகேச னிகராக
அம்பொன்மிக வைத்தபேரு

நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரு
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
முறங்குவது மாகமுடியு
முள்ளதே போதுநா னெனெனக் குளறியே
யொன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. —தாயுமான சுவாமிகள்

இவ்வாறே, உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் சொர்க்காதி பதவிகளும் அவைகளினும் மேம்பட்டபொருள் களையும் பதவிகளையும் நோக்க, அற்பமாகத் தோன்றிக் கொண்டே போய் மேம்பட்ட பொருள்களிலே ஆசை உண் டாதலினால் உயிர்களை எக்காலத்தும் பற்று விடாமல் தொடர்ந்துகொண்டே போகிறது. ஆதலினால் உயர்வொப் பில்லாத பரமானந்தப் பரம்பொருளாகிய பரசிவனிடத்தில் பற்று வைத்தால் வேறொரு பொருளிடத்தில் பற்றுவைத் தற் கிடமில்லாமல் பற்று முற்றிலும் நீங்கிவிடும்.

தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போது
மனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன் சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றாதாய் கோத்தும்பீ.

—திருவாசகம்

நாம் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவர்களாயிருத் தலினால், நம்மை யனாதியாகவே பந்தித்து எண்ணிறந்த பிற விகடோறும் விடாது தொடர்ந்து துன்பஞ் செய்துகொண்டி ருக்கும் பாசப்பற்றை நாமே நீக்கிக்கொள்ள வல்லேலாமல்

லோம். அல்லாமலும், நாம் இன்பத்தை விரும்பித் துன்பத்தை வெறுப்பவர்களாயிருந்தும், அஞ்ஞானத்தால் துன்பந் தருவனவற்றை இன்பந் தருவனவாக வெண்ணி விரும்புகிறோம். இன்பந்தருவனவற்றைத் துன்பந் தருவனவாக வெண்ணி வெறுக்கிறோம். ஆதலால் நம்முடைய அஞ்ஞானத்தை யுணர்ந்த பரமகருணாநிதியாகிய கடவுள் நம்முடைய நிலைமைக் கிரங்கி, நம்மை அப்பற்றினின்றும் விடுவித்து முத்தியின்பத்தைத் தரவேண்டி, நம்முடன் வேறறக்கலந்து உயிர்த்துணையாயிருந்து ஓயாது உபகரித்து வருகிறார். ஆதலால் நாமும் அவரருள் வழியில் நின்று அவருடன் ஒத்துச்சென்று அவர் திருவடியை யிறுகப்பிடித்து நிற்போமாயின் பாசப்பறறு பறந்தோடிப்போம். அப்படிச்செய்யாமல் அதற்கு மாறாக மனைவிமக்களையும் செல்வத்தையும் நமக்குத் துணையாகவும், நம்மை அவர்களுக்குத் துணையாகவும் எண்ணி நம்மிறைவரை மறந்திருந்தால் எங்ஙனம் உய்யலாம் ?

> செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்
> விழுகின்ற வென்னைவிட்டிடுதிகண் டாய்வெறி வாயறுகா
> லுழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே
> வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே.

—திருவாசகம்

நம்முடைய சரீரமோ, நீரிற்குமிழிபோல் நிலையில்லாதது. அடுத்த கணம்வரை இச்சரீரம் இருக்கும் என்று எண்ணவிடமில்லை. இதனால் பெரியோர்கள் யமன் வருவான் என்று எதிர்காலத்தாற் சொல்லாமல் "வந்தது வந்தது கூற்று," யமன் வந்துவிட்டான், வந்துவிட்டான் என்று இறந்த காலத்தாற் சொன்னார்கள். யமன் வந்துவிட்டால் நாம் துணையாக மதித்திருக்கும் மனைவிமக்கள் நமக்குத் துணையாக வந்து யமனை விலக்குவரோ ? நாம்

மிகவும் பாடுபட்டுத் தேடிவைத்த செல்வம் அவன்வாராதபடி தடுக்குமா? அக்காலத்திலும் நம்மை விடாது தொடர்ந்து பெருந்துணையாக இருந்து உபகரிப்பவர் நம்மிறைவரே யன்றோ? இதனை யறிவதற்கு நூல்கள் வேண்டுமா? இல்லையே! இது ஒவ்வொருவரும் தினந்தோறும் அநுபவமாகக் காணும் பிரத்தியட்சப் பிரமாணமேயன்றோ? அற்பமாகிய ஒரு புகழுக்கும் இறப்பது திண்ணமென்று தெரியுமே? இவ்வாறிருக்கவும் அறிவிற் சிறந்த மனிதர்கள் இதனை மறந்திருப்பது எவ்வளவு அறிவீனம்!

நவிலி னிம்மனை மக்களுக் கொருதுணை நாமல திலையென்றே
கவலை யுற்றான் றூண்மறந் தனையுனைக் காலனூர்கொடுபோயிற் [காற்
குவல யத்தடைந் திவரை நாடொறும் புரந்திடுவையோ குறிக்குங்
சவலை நெஞ்சமே சிவனலா துயிர்க்குயிர் தானுமோர் துணையாமே.

—வைராக்கியசதகம்

வெஞ்சம னஞ்ச வேலொ டெதிர்ந்தா னமரங்கா
ளஞ்ச லெனுஞ்சொல் லார்சொலவல்லார் நமரங்காண்
மஞ்சிவ ரிஞ்சி மன்ற மிறைஞ்சீர் நமரங்கா
ணஞ்ச மயின்றார் நல்குவர் மாதோ நமரங்காள்.

—சிதம்பரச் செய்யுட் கோவை

கட்டுங் கனமுமந்தக் காலர் வரும்போ தெதிர்த்து
வெட்டுந் தளமோ விளம்பாய் பராபரமே.

மின்னனைய பொய்யுடலை மெய்யென்று நம்பியையோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே.

—தாயுமானவர்

கடவுட் பற்றைப் பற்றுவதற்கு உலகப்பற்றை விட்டிருப்பதும், உலகப்பற்றை விடுவதற்குக் கடவுட் பற்றைப் பற்றுவதும் ஆகிய இவ்விரண்டும் ஒன்றற்கொன்று காரண காரியங்களாக விருக்கின்றன. (உலகப்பற்றென்பது தனுகரணபுவன போகங்களில் வைத்தபற்று.) ஆதலால் உலகப்

பற்றில் அழுந்திக்கிடப்போர், நாங்கள் கடவுளிடத்தில் பற்று வைத்திருக்கிறோம் என்று சொல்வது வெறும் வாய்ச் சொல்லேயாம். ஒருவன் தனக்குள்ள கடவுட் பற்றை யளவிட வேண்டுமாயின் அவன் தன்னிடத்திலுள்ள உலகப் பற்றைக்கொண்டு அதை அளவிட்டு விடலாம். கடவுள் ஆருயிர்க் கெல்லாம் அருந்துணையாயிருந்து சுகங்கொடுக்க வல்ல பேரின்ப வாரிதியேயாயினும் உலகப் பற்றைவிட்டு அவரையே பெரும்பற்றாகப் பற்றினவர்களுக்கே அவர் பெருந்துணையாயிருந்து பேரின்பம் கொடுப்பர். அவரைப் பற்றாமல் உலகப்பற்றையே பெரும் பற்றாகப் பற்றியிருப் பவர்களுக்கு அவர் அருள் உண்டாவதில்லை. எந்நாளும் துன்பமே உண்டாகும்.

பேரின்ப வடிவினராகிய கடவுளைத் தவிர மற்றப் பொருள்களெல்லாம் மாயாமயமாய்த் துக்க ரூபமாயிருத் தலினால், பெரியோர்கள் பிரமாதி தேவர்களின் பதவி களையும் துக்கமெனக் கழித்துக் கடவுட்பற்று ஒன்றையே வேண்டுவர். சிறியோர் எவ்வளவு துன்பத்திலழுந்திக் கிடந்தாலும் கடவுளை மறந்து உலகப் பற்றையே விடாது பற்றிக் கொண்டிருப்பார்.

> புழுகெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
> கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
> விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
> களியார் சுமைபோடு தற்கு. —நீதிநெறி விளக்கம்.

கடவுளிடத்தில் திடமான பற்றில்லாதவர்கள் துறவு பூண்டாலும் யாதொரு பயனையும் அடையமாட்டார்கள். இல்லறத்திலிருந்தாலும் கடவுளிடத்தில் திடமான பத்தி செய்வோர் உலகப் பற்றில் அழுந்தாதிருப்பர். இது நமது நாயன்மார்களின் சரித்திரங்களால் விளங்கும். நமது நாயன் மார்களுள் ஒருவர் தமது அருஞ்செல்வக் குழந்தையை

அறுத்துக் கறியாக்கிச் சிவனடியார்க் குண்பித்தார். ஒருவர் தமது கட்டளை கடவாத கற்பிற் சிறந்த காதலியாரைச் சிவனடியவருக்குக் கொடுத்துவிட்டார். இவர்களெல்லோரும் இல்லறத்திலிருந்துகொண்டே கடவுளிடத்தில் உண்மையான பத்தி செலுத்தியபடியால் இவர்களை உலகப் பற்று அணுத்துணையேனும் பாதிக்கவிடம் பெற்றிலது. ஆதலால் பற்றை யொழித்தற்குப் பத்தி மார்க்கமே சிறந்த மார்க்கமாகும்.

மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந் தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகி லுய்யலாம் நெஞ்சி னீரே.—தேவாரம்.

"சைவம்"

# தேவார உரை

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

## திருஞானசம்பந்த சுவாமிகள்

**திருநள்ளாறும் - திருவாலவாயும் வினுவிடை - பண் - நட்டபாடை**

"பாகமும் தேவியை வைத்துக்கொண்டு
பைவிரி துத்திப்பரிய பேழ்வாய்
நாகமும் பூண்டநள் ளாறுடையநம்
பெருமானிது வென்கொல் சொல்லாய்
போகமு நின்னைமனத்து வைத்துப்
புண்ணியர் நண்ணும் புணர்வுபூண்ட
ஆகமுடை யவர்சேரும் கூடலால
வாயின்க ணமர்ந்த வாறே."

பதவுரை :—தேவியை பாகம் வைத்துக் கொண்டும் - (மெல்லியலை உடைய) உமாதேவியாரை உனது இடது பாகத்தில் வைத்துக் கொண்டிருந்தும்,

துத்திவிரி பை பரிய பேழ்வாய் நாகம் பூண்ட - புள்ளியோடு கூடிய விரிந்தபடத்தையும் பெரிய பிளந்த வாயையும் உடைய பாம்புகளைத் திருமேனி முழுவதும் அணிந்திருக்கிற,

நள்ளாறு உடைய நம் பெருமான் - திருநள்ளாற்றிலே திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கிற எங்கள் பெருமானே,

நின்னை மனத்து வைத்து - உன்னையே, சிவகரணமாய் மாறிய தங்கள் தூய மனதில் எப்பொழுதும் நினைத்துக் கொண்டு,

போகமும் நண்ணும் புணர்வுபூண்ட - (தங்கள் இல்லற வாழ்க்கையில் அதற்குரிய அறநெறியினின்றும் வழுவாமல்) நுகரும் உலக சிற்றின்ப போகத்தையும் சிவபோக பேரின்பமாய் நுகரும் தகுதியடைந்த,

ஆகம் உடையவர் புண்ணியர் - தூய உடல்களையும் (கரணங்களையும்) உடையவர்களாகிய சிவ புண்ணியர்கள்,

சேரும் - சேர்ந்து வாழும் சிறப்பை உடைய,

கூடல் ஆலவாயின் கண் அமர்ந்த ஆறு இது - நான்மாடக் கூடலாகிய மதுரை நகரில் திருவாலவாய் என்னும் திருக்கோயிலில் வீற்றிருக்கும் தன்மையாகிய இது,

என் கொல் சொல்லாய் - யாது கருத்து பற்றியோ (நான் அறிய மாட்டேன்) நீயே அக்கருத்தை எனக்குச் சொல்லி அருள்வாயாக.

விளக்கவுரை :—தேவியைப் பாகம் வைத்துக் கொண்டும் - பாகமும் என்ற சொல்லில் சேர்ந்துள்ள ‘ உம் ’ என்பதை, ‘கொண்டு’ என்பதனோடு சேர்த்துப் பொருள் கூறப்பட்டது.

துத்தி விரி பை பரிய பேழ்வாய் நாகமும் பூண்ட-நாகமும் என்பதிலுள்ள 'உம்' அசை. துத்தி விரி பை பரிய பேழ்வாய் நாகம் பூணுதல், இடது பக்கத்திலிருக்கிற மெல்லியல் உமாதேவியார் அஞ்சத்தக்கது என்பார் தேவியைப் பாகம் வைத்துக்கொண்டும் நாகமும் பூண்ட என்றார்.

பூணும் என்று கூறற்பாலது, இயல்புபற்றி பூண்ட என்று இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. அருட்சத்தியாகிய பராசத்தியானவள் உயிர்கள்பொருட்டு ஐந்தொழில் செய்தற்காக முதற்கண் சுத்தமாயையைத் தொழிற்படுத்தி அசுத்தமாயையில் விளங்கும்பொழுது குண்டலி சத்தி என்று கூறப்படுகிறாள். குண்டலி என்பது பாம்பு. மூலாதாரத்தில் விளங்கும் இச்சத்தியானது சாமானிய மக்களுடைய உயிரினிடம் விளங்காதிருக்கும்பொழுது பாம்பு போல் படுத்திருத்தல்போல யோகிகள் அகக்கண்ணுக்குக் காணப்படுதலால் சுத்தமாயைக்குச் சமய நூல்களில் குண்டலி என்ற பெயர் வழங்கப்படுகிறது. இறைவனடியைந்து நின்று அருட்சத்தி, சுத்தமாயையாகிய குண்டலியில் தொழில் செய்தலை இறைவன் தனது திருமேனியில் பாம்பு அணிந்திருப்பதாகச் சிவபுராணங்கள் கூறுகின்றன. ஈண்டு நாகம் பூண்ட என்பது இந்த உண்மையைக் குறிக்கின்றது.

நள்ளாறு உடைய நம்பெருமான் - நம்பெருமான் அண்மை விளி. பெருமான் - பெருமையிற் சிறந்தவன். அடியார்களெல்லாரும் அறியும் பெருமான் என்பார் நம்பெருமான் என்றார்.

நின்னைமனத்து வைத்து - மனம் என்பது இங்கே சுத்தமாயையில் வைத்து நினைக்கிற தூய்மனம். சுத்தமாயையில் அந்தக் கரணங்கள் நான்கும் ஒன்றுபட்டுச் சிவ கரணமாய் மாறிச் சிவனையே நினைந்துகொண்டிருக்கும் மனம். "சிந்தை தெளிய தெளியவல்லார்க்குச் சிந்தையினுள்ளே சிவனிருந்தானே" என்று திருமந்திரம் 2853. வது பாட்டுக் கூறுதல் காண்க.

போகமும் நண்ணும் புணர்வு பூண்ட - போகமும் என்பது ஈண்டு இல்லற வாழ்க்கையில் அறநெறிக்குட்பட்டு

நுகரப்படும் உலக சிற்றின்ப நுகர்வு. 'போகமும்' என்பதி லுள்ள உம் இழிவு சிறப்பு 'உம்'. புணர்வு - ஒன்று பிறி தொன்றோடு சேர்ந்து இயைந்து பொருந்துதல். இங்கே பேரின்ப நுகர்விளோடு சிற்றின்ப நுகர்வு சேர்ந்து இயைந்து பேரின்ப நுகர்வாகப் பொருந்தலாகும். நிலையில்லாச் சிற் றின்ப நுகர்வையும நிலையான பேரின்ப நுகர்வாகச் செய் தல் அதனைச் செய்கிறவர் தகுதியைக் குறித்தலால் புணர்வு என்பதற்குத் தகுதி என்று பொருள் உரைக்கப்பட்டது.

இதனால் இல்லற வாழ்க்கையிலிருந்து கொண்டே அகப்பற்றுப் புறப்பற்றுக்க ளற்றிருக்கும் சிவஞானிகளு டைய மெய்யறிவு நிலை கூறப்பட்டது. அறுபத்து மூன்று தனி அடியார்களில் இயற்பகை நாயனார், இளையான்குடி மாற நாயனார், திருநீலகண்ட நாயனார், சிறுத்தொண்ட நாய னார் முதலிய இல்வாழ்க்கையர்களுடைய மெய்யறிவு நிலையும் இதுவேயாகும். திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் தாம் அருளிச்செய்த திருக்களிற்றுப் படியார் 76-வது பாட் டில்,

> உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்பம்
> அடங்கத்தாம் பேரின்பத் தாக்கிற்—றொடங்கி
> முளைப்பது மொன்றில்லை முடிவது மொன்றில்லை
> இளைப்பது மொன்றில்லை இவர்.

என்றும், மாணிக்கவாசக அடிகள் திருவாசகம் பண்டாய நான் மறை 6-வது பாட்டில்,

> காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்
> பேணு மடியார் பிறப்பகலக்—காணும்
> பெரியானைப் பெருந்துறையி லென்றும்
> பிரியானை வாயாரப் பேசு.

என்றும் இந்த அரிய உண்மையைக் கூறியருளினார்.

ஆகமுடையவர் புண்ணியர்- ஆகம் என்றது ஈண்டுச் சிவ தனுவாக மாறப்பெற்ற உடல் " ஞானிக்குக் காயம் சிவமே தனுவாகும்" என்றார் திருமூலர். திருமந்திரம் 2135-வது பாட்டில், கரணங்களின் றிப் போகம் நிகழாதாதலின் இனம்

பற்றிக் கரணங்களும் உடன்கொள்ளப்படும். சிவஞானிகள் பிரகிருதி மாயா தத்துவங்கள், அசுத்த மாயாதத்துவங்களாலாகிய உடலோடு கூடியிருப்பினும் உலகபோக ஐம்புலச்சேற்றிலிழுக்கும் அவற்றின் சேட்டைகள் சிறிதும் அவர்களிடம் செல்லா. புண்ணியர் என்பது இங்கே திரோதமலம் வயப்பட்ட இருகூற்றுத்தன்மை (துவந்துவம்) உடைய பாவ புண்ணியங்களைக் கடந்த சிவபுண்ணியத்தைக் குறிக்கிறது. இந்தச் சிவபுண்ணியத்தைச் செய்யும் புண்ணியர் மெய்யறிவர் ஆவார்.

ஆகமுடையவர் புண்ணியர் - ஆகமுடையவராகிய புண்ணியர்.

சேரும் கூடல் ஆலவாயின்கண் - கூடல் என்பது நான்மாடக்கூடலாகிய மதுரைநகரையும். ஆலவாய் என்பது மதுரையிலுள்ள சொக்கப்பிரான் திருக்கோயிலையும் குறிக்கின்றன.

ஓர் ஊர் அதன் கண்வாழும் சிவஞானிகளால் சிறப்பு அடைதலால் புண்ணியர் சேரும் கூடல் ஆலவாய் என்றார்.

அமர்ந்த ஆறு என் கொல்சொல்லாய் - கொல் அசை. வீடலாலவாய் என்ற முதற்குறிப்புத் தேவாரப் பாட்டின் ஈற்றில் குலாயது என்னகொள்கையே என்று அடிகள் கூறியதை இந்தப்பாட்டில், அமர்ந்தவாறு என் என்று கூறினர். நள்ளாறுடைய நம்பெருமான், ஆலவாயின்கண் அமர்ந்தவாறு என்கொல் சொல்லாய் என்று அடிகள் கேட்ட கேள்வியினால் திருநள்ளாற்றின்கண் வீற்றிருந்தருளுகிறவரும் ஆலவாயில் வீற்றிருந்தருளுகிறவரும் ஒருவரே என்பது கூறப்பட்டது. அடிகள் இந்தப் பாட்டில் மேலீடாக அறிகிறவர்களுக்கு நகைச்சுவை தோன்றும்படிக்கும் உள்ளீடாக அறிகிறவர்களுக்குச் சிவபெருமானைப்பற்றிய ஞானக் கருத்து விளங்கும்படிக்கும் பாடி அருளினார்.

மெல்லியலை உடைய உமாதேவியாரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அவள் அஞ்சும்படி பாம்புகளைச் சிவபெருமான் தமது திருமேனி முழுவதிலும் அணிந்து

கொண்டிருத்தலும் அங்ஙனம் அவன் பாம்புகளை அணிந்து கொண்டு மாந்தர் நெருங்கிவாழும் மதுரை ஊர் நடுவிலிருப்பதும் பொருத்தமில்லாத செயல்களாதலின் நகைச்சுவையைப் பயப்பனவாகும்.

பாம்பு என்பது குண்டலி சத்தியைக் குறிக்கிறது. குண்டலி என்ற சொல்லுக்குப் பாம்பு என்பது பொருள். குண்டலிசத்தி யென்பது மூலாதாரத்தில் சுத்த மாயையில் விளங்குகிற அருட்சத்தி. இந்தச் சத்தி மூலாதாரத்தில் பாம்புபோல வளைந்திருப்பதாகக் காணப்படுதலால் குண்டலி எனப்பட்டது. அதனால் குண்டலி என்ற சொல் சுத்த மாயைக்கும் ஒரு பெயராய் வந்தது.

சுத்தசிவம் தனது அங்கமாயிருக்கிற சதாசிவமூர்த்தியிடமிருந்து சுத்தமாயையில் ஐந்தொழில்களையும் நேரே செய்தலால் சிவபெருமான் தனது திருமேனியில் பாம்புகளை அணிந்திருக்கிறான் என்று புராணங்கள் கூறுகின்றன. "சிவபெருமான் அருட்சத்தியாகிய உமாதேவியோடியைந்து நின்று, குண்டலி எனப்படும் சுத்தமாயையில் உயிர்கள் பொருட்டு ஐந்தொழில் செய்கிறான் என்ற உண்மையை அடிகள், பாட்டினை ஓதுகிறவர் நகைச்சுவை காணும்படி பாகமும் தேவியை வைத்துக்கொண்டு நாகமும்பூண்ட இது என்கொல் சொல்லாய் என்று கூறியருளினார்."

அங்ஙனம் உமாதேவியோடியைந்துநின்று ஐந்தொழில் செய்கிற சிவபெருமான், உலக போகத்தையும் சிவபோகமாக நுகரும் தகுதியுடைய சிவபுண்ணியர் வாழும் மதுரை நகரின் நடுவிலுள்ள ஆலவாயில் வீற்றிருத்தல் பொருத்தமாயுள்ள செயல் என்று கூறும் அடிகள், நகைச்சுவைபட ஆலவாயின்கண் அமர்ந்தவாறு என்கொல் சொல்லாய் என்று கூறியருளினார்.